செந்தமிழ்

தொகுதி 82 டிசம்பர் 84 பகுதி - 4

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

— உள்ளே —

மது அருந்துதல் — பழக்கமா அல்லது நோயா?
இரு பெரும் கவிஞர்கள் — கவிதை
கடல் கடந்த கண்ணன்
சுவாமி விவேகானந்தரும் பசும் பொன் தேவரும்
சேதுபதிகள் பற்றிபாரதப் பிரதமரின் பாராட்டுகள்
மரபுக்கு மீறிய திருக்குறட் பதிப்பு
மனமுருகிக் கண் திறந்தாள் — கவிதை

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

5018

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1

ஆசிரியர் என்.எஸ் முத்துமலைச்சாமி, பி.ஏ பி.எல்..

செந்தமிழ்

தொகுதி 82— டிசம்பர் 88 —பகுதி 4

பொருளடக்கம் பக்கம்

1) மது அருந்துதல் — பழக்கமா அல்லது நோயா? —டாக்டர். இராமச்சந்திரன், 1

2) இரு பெரும் கவிஞர்கள் — டாக்டர். பழநி. அரங்கசாமி 4

3) இசை நாடகப் பேரொளி — ஆ. பெ. அரசு 6

4) கடல் கடந்த கண்ணன் (சென்ற இதழ்த் தொடர்ச்சி) — பி. ஆர். சுவாமி 10

5) சுவாமி விவேகானந்தரும் பசும்பொன் தேவரும் — O. P. வாசுதேவன் 15

6) யாப்பருங்கலமும் காரிகையும் — டாக்டர். சுயம்பு, 22

7) சேதுபதிகள் பற்றி பாரதப் பிரதமரின் பாராட்டுகள் 38

8) நூல் மதிப்புரை 40

9) இலக்கியச் செலவு 41

10) மரபுக்கு மீறிய திருக்குறட் பதிப்பு 45

11) மனமுருகிக் கண் திறந்தாள் — சௌந்தரா கைலாசம் 52

12) தமிழ்ச் சங்கச் செய்திகள் 55

— பொறுப்பாசியர் டாக்டர். பழநி. அரங்கசாமி

மது அருந்துதல் - பழக்கமா அல்லது நோயா ?

துஞ்சினர் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்

— குறள்

மனநோய் மருத்துவப் பேராசிரியர்
டாக்டர். இராமச்சந்திரன்,
சென்னை-10

உலக சுகாதார நிறுவனம், மதுவுக்கு அடிமையாதலை ஒரு மனநோய் என்று வரையறை செய்கிறது.

தொடர்ந்தோ அல்லது விட்டு விட்டோ ஒருவர் மது அருந்தி வருவாராயின், அவருடைய மன நிலையிலும் உடல் நிலையிலும் மாற்றம் ஏற்பட்டு மது அருந்துவதிலேயே அவரது மனம் ஈர்க்கப்படும். மது அருந்துவதை கட்டுப்படுத்துவது அவருக்கு கடினமாகி விடும். அவர் தன் உடல் நிலை, நடவடிக்கைகள், தொழில் திறன், குடும்ப உறவு, பெருமை, அனைத்தையும் பாதிக்கும் அளவிற்கு குடிக்கத் தொடங்குவர் என்று உலக சுகாதார நிறுவனம் விளக்கம் தெரிவிக்கின்றது.

மதுவினைக்குடித்த பிறகு தனக்குத் திறமைகள் கூடுகின்றன என்று எண்ணுவோரும், காலை வேளைகளில் குடிப்போரும், மனத் தளர்விலிருந்து விடுபடுதற்கு மது அருந்துவோரும், வருமானத்தில் பெரும்பகுதியை குடிப்பதில் செலவழிப்போரும், குடிப்பதனால் தனது கடமையிலிருந்தும், பணியிலிருந்தும் தவறுவோரும், மிகுதியான குடியினால் வயிற்றுவலி, மஞ்சட்காமாலை போன்ற நோய்களினால் தாக்கப்படுவோரும் குடிநோயாளி என்று கருதப்படுவர். எனினும் மது அருந்துவோர் அனைவரும் குடிநோயாளகள் அல்ல.

குடிநோய் பல காரணங்களால் உருவாகின்றது. அவற்றை உடல் சார்ந்த, உளம் சார்ந்த, மற்றும் சமூகம் சார்ந்த காரணங்களாகப் பிரிக்கலாம்.

குடிநோய் சிற்சில நேரங்களில் குடும்பங்களிலும் ஏற்படுகிறது. இளமையிலேயே குடிக்க ஆரம்பித்து, அதனால் ஏற்படுகின்ற சிக்கல்களில் பலர் இளமையிலேயே மாட்டிக் கொள்கிறார்கள்.

ஆனாலும் பல குடி நோயாளிகள் குடியையே பல தலைமுறைகளில் கண்டறியாத குடும்பங்களில் கூட தோன்றுகிறார்கள்

குடி மனச் சோர்வை மூழ்கடிப்பதாக நினைக்கிறோம்.

இல்லை அது மனச்சோர்வை நீருற்றி வளர்க்கிறது. பற்பல குடி நோயாளிகள் தற்கொலையால் வாழ்வை முடித்துக் கொள்கிறார்கள் குடிநோயே "நாட்படு தற்கொலை" என அழைக்கப்படுகிறது. அதிகமான ஆவேசத் தேவைகள், சண்டைகளைத் தொடர்ந்து அதிகமான ஆவேசத் தன்மை, தன்னம்பிக்கை குறைவு அல்லது குறைபட்ட அக வலிமை போன்ற உளம் சார்ந்த காரணங்கள் குடிநோயை வளர்க்கின்றன அலுவல் பதட்டங்கள், பல கூட்டங்களுக்கும் பார்ட்டிகளுக்கும் செல்லுதல், அடிக்கடி பயணம் அதனால் வீட்டிற்கு வெளியே தங்கும் சூழ்நிலைகள், குடும்பத்திலிருந்து விலகி இருக்கிற மாதிரி அலுவல் சூழ்நிலைகள் மேலும் கூடியிருப்பவர் பலர் குடிக்கின்ற மாதிரி சூழ்நிலை ஆகியனவே குடிப்பழக்கத்தை வளர்ப்பதற்குரிய சமூகம் சார்ந்த காரணங்கள் ஆகும்.

குடிநோய் கொடிய புற்றுநோயை விடக் கொடியது.

மது மனிதனுடைய உடலையும், மனிதத்தன்மையும் அழித்து விடுகின்றது

குடிநோயால் ஒருவருடைய இரைப்பை, கல்லீரல், நரம்பு மண்டலம், இருதயம் முதலியவை பாதிக்கப்படுகின்றன

மேலும், அவர் பல விபத்துக்களுக்கு ஆளாகலாம். அவருடைய நன்னடத்தையை கெடுத்து விடுகிறது. ஆவேசத்துடன் பேசுதல், கோபப்படுதல், சண்டையிடுதல் பொருள்களைப் போட்டு உடைத்தல், மற்றவர்களைத் தாக்குதல் போன்ற நடத்தைகளும் குணமும் ஏற்பட்டு விடுகிறது.

வேலையில் அவர்கள் திறன் குறைந்து விடுகிறது. பணத்தை மதுவிலும், மற்ற செலவுகளிலும் அதிகம் செலவிட்டு குடும்பக் கடமையைச் சரிவர செய்ய முடியாமல் போய்விடுகிறது

குடும்ப வாழ்க்கையில் அமைதி குறைந்து விடுகின்றது. மணவாழ்க்கையில் குறைவு ஏற்பட்டு விடுகின்றது.

வீட்டின் தகாத சூழ்நிலை காரணமாக குழந்தைகளின் மன வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றது

குடி நோயாளி தன் உடல் நலத்தையும் நற்குணத்தையும், தொழிலையும், பொருளையும், அமைதியையும், மானத்தையும் இழந்து அவதியுறுகிறான். அதனால் குடி நோய் கொடிய புற்று நோயை விடக் கூடியது.

குடிநோயிலிருந்து விடுபட மனோ சிகிச்சை அவசியம்

பல குடி நோயாளிகள் தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட பழக்கம் இது என்பதால் தாங்களாகவே இதை நிறுத்திவிட முடியும் என்று எண்ணுகிறார்கள்.

ஆம், சிலர் முயன்று தாங்களாகவே நிறுத்தி விடுகிறார்கள்

ஆனால் ஒருவருக்கு மதுவை விலக்கி அதிக நாட்கள் இருக்க முடியவில்லையென்றால் மனநல மருத்துவ உதவியை நாடுவதற்குக் காலதாமதம் கூடாது

குடிநோய் உடல் சார்ந்த, உளம் சார்ந்த அலுவல் சார்ந்த நிதி சார்ந்த, சமூகம் சார்ந்த சிக்கல்கள் உருவாகும் வரை பொறுத்திருக்க வேண்டாம்.

எல்லா குடி நோயாளிகளும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டே ஆக வேண்டும். வீட்டுச் சூழலில் சிகிச்சை செய்ய முடியாது.

மருத்துவ மனையில் மதுவை உடனடியாக நிறுத்தி விட முடியும். விடின்வரு நோய்க் குறிகளை விட்டமின்களாலும், தக்க மருந்துகளாலும் கட்டுப்படுத்த முடியும்.

குடிநோயால் விளையும் மனித உறவுக் கஷ்டங்கள், அலுவல் மற்றும் நிதித் தொடர்பான சங்கடங்களை மருத்துவர்கள் அறிவார்கள் அதனால் அவற்றைப் பற்றி மருத்துவரிடம் விவாதிக்கத் தயங்கக் கூடாது.

ஒரே மாதிரியான, சடங்கு போன்ற ஆட்படுத்தும் குடி ஒருவனை அர்த்தமுள்ள சிந்தனைக்கும் செயலுக்கும் தகுதியில்லாதவனாக ஆக்குகிறது.

குடியை நிறுத்துதல், சுய வளர்ச்சிக்கு உதவுகிறது. சிக்கல்களை எதிர்நோக்கும் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கும் வாழ்க்கை எப்படி வருகிறதோ அப்படியே ஏற்றுக் கொள்வதற்கும் வழிகாட்டுகிறது.

குடி நோய் திரும்ப திரும்ப வருகின்ற ஒரு குறைபாடு ஆகும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். முதல் கோப்பையைத் தவிர்ப்பதே திரும்ப இந்த நோய் பீடிக்காமலிருக்கச் செய்வதற்கு உபாயம். முதல் கோப்பையைத் தவிர்த்தால் திரும்ப வரும் நோய்க்கு ஒரு கோப்பையினை விலக்கி விடுவதாகும்.

மனம் கனமாக இருந்தாலும், வருத்தமாய் இருந்தாலும் மது தவிர்ப்பு எண்ணம் குறையக் கூடும். அந்த நேரம் குடிக்காமல் திரும்ப வந்து மனோசிகிச்சை பெற வேண்டும்.

இருபெரும் கவிஞர்கள்

— பழநி அரங்கசாமி

தேமதுரத் தமிழோசை தெருவெல்லாம் முழங்கவென்றே
பாமதுரப் பாரதியும் பாடி நிதம் சென்று விட்டான்.
கத்தும் தரங்கக் கன்னியாகுமரி முதல்
மெத்தவே புகழ்பெறும் மேல் இமயக் காச்மீரப்
எத்திசையும் எதிரொலிக்க எடுத்தியம்பும் நற்றமிழில்
நாமக்கல் கவிஞனொடு நல்லிமய மகசூரும்
பல்வேறு மொழியில் வந்து பாகாய் இனிக்க வைத்த
நல்லெண்ணம் கொண்டீர்! நான்மொழியும் படித்தறிந்தீர்!
ஆணுமாய்ப் பெண்ணுமாய் அருங்கவிதை படிக்க வந்த
ஆன்றோரே! சான்றோரே! அருள்கூர்ந்து செவி மடுப்பீர்!

காலத்தை வென்றதுவும் கவிதை
ஞாலத்தை அளப்பதுவும் கவிதை
நிந்தனையைத் தருவதல்ல கவிதை
சிந்தனையைத் தூண்டுவதே கவிதை
அருளினைப் பொழிவதுவும் கவிதை
அன்பினை ஊட்டுவதும் கவிதை

வேறு

அந்தக் கவிதையைச் சொந்தமாக்கி
பந்தம் கொண்டே பாரதி புகழும்
சாந்தம் உருவம் சால்பும் உண்மை
காந்தம் என உளம் கவர்ந்த சீலன்
காந்தியின் பெயரைத் தாந் தனமாக்கிய
நாமக்கல் புகழ் நல்லுறு புலவன்

இமயத்தடவரை எங்கும் எதிரொலி
காதல் நயத்தைக் களிப்புறக் கூவும்
காஷ்மீர் பொழியின் கனிவுறு தோன்றல்
இமயம் குமரியை ஒன்றெனக் கண்ட
இணையறு தோன்றல் எந்தம் கவிஞன்
வாழினும் வீழினும் இந்தியர் நாமெனக்
கொஞ்சிப் பாடிடும் குலாம் அகமது —
இருவரும் கண்டது இந்திய தேசம்!
போற்றிப் புகழ்ந்தது காந்திய வாதம் -
பின்னிப் புனைந்தது பொன்னார் கவிதை
எண்ணி நினைந்தது இந்திய ஒற்றுமை!
கண்ணீர் சிந்தக் கனிவுறு பாட்டு
பண்ணீர் பொருந்தப் பாங்குறு மெட்டு
எட்டுத் திசையும் கொட்டம் அடங்கிட
கட்டுக் குலையாக் கன்னியர் பாடிட
மென்மை தன்மை திண்மை பொலிவுறு
நாடும் நன்மை நலமுறக் கூவினர்.

வேறு

பெற்றவோர் விடுதலையை பேணி நிதம் காப்போமோ!
உற்றவோர் பகுதிகளை ஊரறியப் பிரிப்போமோ!
ஒன்றுபட்ட இந்தியாவில் உயர்ந்து நிதம் வாழோமோ!
கன்றினையே பிரிந்துவிட்ட காராவாய்க் கதறுவமோ -
ஒன்றுநினைந் துயர்வெண்ணி உருப்பட்டுத் தீரோமோ!
மொழிப்பற்றை வெறியாக வளர்த்துவிட்டுக் குலைவோமோ!
வீட்டு மொழி, நாட்டுமொழி வேற்று மொழி கற்போமோ!
பன்மொழியும் கற்று இந்தப் பாருலகில் நிற்போமோ!

இந்தியத் தாயின் தோள்களை வெட்டினோம் -
இனி ஒரு பிரிவினை எனில் அதைச் சகித்திடோம்!
மலை இமயக் காச்மீரம் தலைகொடுத்தும் காப்போம்
காஷ்மீரக் கன்னியினைப் பிறர் கவரப் பாரோம்!

இமயமுதல் குமரிவரை எமதினிய நாடு -
இதன்பெருமை காத்து நிதம் எழிலாகப் பாடு!
உடைக்க வரும் தாழ்வு மனம் ஒதுங்கி நிதம் ஓடு!
உண்மை நின்று அகிம்சை வெல்லும் ஓங்கி நீயும் பாடு!

1988, அக்டோபர் 15, 16 தேதிகளில் காஷ்மீர் மாநிலம் ஜம்முவில் நடைபெற்ற நாமக்கல் கவிஞர்—குலாம் அகமது மகசூர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு கவியரங்கில் பாடியது!

இசை நாடகப் பேரொளி

—ஆ. பெ. அரசு
மதுரை - 10.

தமிழ்-இசை நாடகத் தென்றல் இரா. வெ. உடையப்பா தற்போதுள்ள பசும்பொன் மாவட்டம் மறவமங்கலம் வேலா-ரேந்தல் எனும் சிற்றூரில் விவசாயக் குடும்பத்தில் வெள்ளைச்சாமித் தேவருக்கு மகனாகப் பிறந்தவர்.

உள்ளூரில் ஆரம்பக்கல்வி கற்று இடையிலே சிவகங்கையிலே தாய்மாமன் வீட்டில் தங்கியிருந்த போது அருகிலுள்ள திரைப்படக் கொட்டகையில் ஒலிபரப்பக் கூடிய திரைப் பாடல்களைக் கேட்டு உணர்ந்து அவ்விதமே பாடியதால் தாய்மாமன் இவரை 10 வயதிலே நவாப் ராஜமாணிக்கம் நாடகக் கம்பெனியில் சேர்த்து விட்டார்.

அதில் திரைப்பட நடிகர் டி. எஸ். பாலையா அவர்களுடன் இணைந்து பல்வேறு பாத்திரங்களில் இவர் நடித்துள்ளார். அதுசமயம் பசும்பொன் தேவர் அவர்கள் பேசுகின்ற பல்வேறு கூட்டங்களிலே உடையப்பா மேடைகளில் தோன்றி பாடல்கள் பாடி பாராட்டும் பெற்றுள்ளார்

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி நாடகக் குழுவில் சேர்ந்து நடித்து வந்த போது காலஞ்சென்ற தமிழக முதல்வர் அண்ணாத்துரை அவர்களிடம் ஓராண்டு பணி செய்துள்ளார். அதோடு இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களுடன் நெருங்கிய நட்புக் கொண்டு அந்த நட்பு உடையப்பாவின் ஆயுள் முழுமையும் இருந்து வந்துள்ளது.

அதன் பின் அவர் சொந்த மாமன்மகளை திருமணம் செய்து கொண்டு ஒரு ஆண்மகவுக்குத் தந்தையானார். தொடர்ந்து தமிழிசை நாடகங்களில் பங்கு பற்றி நடித்து வந்தார். இவர் நாடகத்தில் நடிப்பதைக் கண்டு வெறுத்து ஒரு குழந்தை பிறந்தவுடனும் பொறுப்பில்லாமல் கூத்தாடியாக இருக்கிறானே என்று கூறி இவரது தந்தையார் இவரைக் குடும்பத்திலிருந்து ஒதுக்கிவிட்டார்.

தஞ்சை, கோவை போன்ற பகுதிகளில் இவர் நாடகங்களில் நடித்து வந்த போது, கோவையில் வீரலட்சுமி என்ற நடிகையை மணம் செய்தார். அதன் பின் வீரலட்சுமி நடிப்புத் துறையிலிருந்து விலகி இவருடன் குடும்பம் நடத்தி வந்தார்.

ஆண் இரண்டு; பெண் இரண்டு. ஒரு ஆண் மகன் இறந்து போக, ஒருவர் சென்னை நந்தனம் கலைக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணி செய்கிறார். பெயர் உ சுப்பிரமணியம். பெண் மக்கள் இருவருக்கும் கண்ணகி, மணிமேகலை என்று பெயரிட்ட உண்மை, உடையப்பாவின் தமிழ் நாடக சிந்தனைக்கு ஒரு எடுத்துக் காட்டு எனலாம். இருமகளிரும் மணம் புரிவிக்கப் பெற்று குடும்பத் தலைவியராக உள்ளார்.

மதுரையில் உள்ள நாடக சபையினரோடு மனப்பூசலின் காரணமாக பசும்பொன் தேவர் பக்தரான உடையப்பா பசும்பொன்-னாரின் நினைவாக 'தேவர் நாடக மன்றம்' என்ற தனி அமைப்பு வைத்து சொந்தமாக நாடகங்கள் நடத்தி வந்தார்!

எத்துணை பெரிய நடிகர்கள் அரிச்சந்திர நாடகம் நடத்திப் புகழ் பெற்றார்கள்! ஆனால் உடையப்பர் நடத்திய அரிச்சந்திரா நாடகமே மக்களைப் பெரிதும் கவர்ந்தது. சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய அரிசந்திர நாடகத்தை புதுமையாக நடத்திக் காண்பித்தார். அரிச்சந்திரன் சுடலை காக்கும் காட்சியில் அரைத்துண்டு காவியுடை அணிந்து / பழைய மரபுப்படி கொண்டை போட்டு நடித்தமை எல்லாரையும் கவர்ந்தது அதற்கு முன் யாரும் இப்படி நடிக்க-வில்லை. பிற நாடகங்களில் எல்லாம் அரிச்சந்திரன் சுடலைக் காக்கும் போதும் ராசா உடையில் தான் வருவான் உடையப்பா தான் இயற்கையாக வரலாற்று உண்மையை நாடக மேடையில் பிரதிபலித்தார்.

சத்தியவான் சாவித்திரி நாடகமும் இவருக்குப் புகழ் பெற்றுத் தந்தது. இவர் சத்தியவானாக நடிக்கின்ற போது இறந்து படும் காட்சியை மிக இயற்கையாக நடித்து, மக்களின் ஆதரவைப் பெற்றார்.

இவர் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று நாடகம் நடத்திப் புகழ் பெற்றுள்ளார்.

தமிழகத் தலைநகராகிய - சென்னையில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்கள், சிவாஜி, எம். ஜி. ஆர். சாண்டோ சின்னப்பாத் தேவர் போன்றவர்கள் தலைமையில் நடத்தி பெயரும் புகழும் பெற்றார். நடிகர் திலகம் சிவாஜி கணேசன், "அண்ணன் உடையப்பா" என்றுதான் இவரை அன்போடு அழைப்பார்.

சாண்டோ சின்னப்பாத் தேவர் எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் உதவியால் மணிமகுடம், பாலாபிசேகம், நவக்கிரக நாயகி போன்ற படங்களிலும் தாய்வீட்டுச் சீதனம் படத்திலும் நடித்து பெரும் புகழ் அடைந்தார்.

கண்ணாம்பூச்சி படத்தில் முழுமையாக நடித்து புகழ் பெற்றார். 'தூக்குமேடை பாலு' என்ற நாடகத்தில் பாலுவாக நடித்துப் பாராட்டுப் பெற்றார்.

அமரர். P. K. மூக்கையாத் தேவர் தலைமையில் தான் இவர் மகள் கண்ணகிக்கு திருமணம் நடைபெற்றது. தலைவர் மூக்குல நாடக மாமணி என்று இவரைப் பாராட்டினார்.

சாண்டோ சின்னப்பாத் தேவர் 'இசை நாடகத்திலகம்' என்று இவரைப் புகழ்ந்தார். அப்போது அமைச்சராக இருந்த கா. காளிமுத்து அவர்கள் 'இசை நாடகப் பேரொளி' என்று பாராட்டியுள்ளார்.

நடிகர் 'சோ' அவர்கள் உடையப்பாவின் நாடகத்திற்குத் தலைமை தாங்கி இவரைக் குணச்சித்திர நடிகரெனப் புகழ்ந்தார்.

தமிழக அரசின் சிறப்புப் பட்டமாகிய கலைமாமணி என்பதை அளித்துப் பெருமைப்படுத்தி தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். மனதார உடையப்பாவைப் புகழ்ந்து பேசியது குறிப்பிடதக்கதாகும்.

இயக்குனர்கள் பாரதிராஜா, மணிவண்ணன் நடிகர்கள் பிரபு, கன்னடத்து எம். ஜி. ஆர். ராஜ்குமார் ஆகியோர் இவரது காலைத் தொட்டு வணங்கி ஆசி பெற்றுள்ளார்கள்.

1978—79ல் உடையப்பாவின் அரிச்சந்திரா நாடகத்திற்கு அரசினர் தடை விதித்து இவர் இரண்டு முறை கைது செய்யப்பட்டார். வழக்குகள் தொடரப்பட்டன, இறுதியில் வெற்றி பெற்று

"அரிச்சந்திரநாடகம் சாதி பேதத்தைக் கடந்தது. அதனால் அந்-நாடகத்தை நடத்தலாம்" என்று வழக்கு மன்றத்தாரால் பின்னர் அனுமதி வழங்கப்பட்டது.

இவர் சொந்தமாக 'அனிச்சமலர்' என்ற திரைப்படத்தைத் தயாரித்தார் கலை நுணுக்கமும் நடிப்புத் திறமையும் கொண்ட படமென்று பலரால் பாராட்டப் பெற்றாலும் போதிய வசூல் இல்லை. இருப்பினும் மனம் தளராமல், உடையப்பா - புருசோத்தமன் பிலிம்ஸ். கம்பெனி என்பதை சொந்தமாக ஆரம்பித்தார். அதில் ரஜினிகாந்த் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

"சென்னையில் தங்கி திரைப்படத்தில் நடியுங்கள்" என்று நண்பர்கள் சொன்ன போதிலும் தமிழிசை நாடகத்தில் பேரார்வம் காட்டி அத்துறைக்கே திரும்பலானார்.

'தேவர் நாடக மன்றம்' வெள்ளி விழாவை சென்னையில் நடத்தத் திட்டமிட்டார். உயர்நீதி மன்ற நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் தலைமை தாங்க ஒப்புதல் தந்திருந்தார் அதற்கிடையில் 1988-ஆண்டு ஏப்ரல் நான்காம் நாள் (4 - 4 - 88) காலதேவன் இந்தக்கலை உலகமன்னனை அழைத்துக் கொண்டான். ஏறத்தாழ ஐம்பதாண்டுகள் இசை நாடகத்துறையில் பங்கு கொண்டு கலைப் பணியாற்றிய உடையப்பா தமது 59 - ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அவர் 49 ஆண்டு காலம் இடைவிடாது தமிழிசை நாடகங்களிலும் சிறப்பாக அரிச்சந்திரன, சத்தியவான் சாவித்திரி நாடகங்களில் நடித்து; சிறப்புப் பெற்று; திரைப்படக் கலையிலும் ஊடுருவி புகழ் பெறறார்.

(தேவர் நாடக மன்ற செயலர் திருவாளர் புருசோத்தமன் கூறியவாறு இன்றியமையாத செய்திகளையே இக்கட்டுரையாளர் ஈண்டு தொகுத்துக் கூறியுள்ளார்.

கடல் கடந்த கண்ணன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பி. ஆர். ஸ்வாமி

குளிர் மிகுந்த நள்ளிரவு. சுவாமிகள் திடீரென்று விழித்துக் கொண்டார். செந்நிறமான சிறிய ஒளி விளக்கின் சுவிட்சைத் தட்டினார். இரவு மணி ஒன்று. மேலும் தூக்கம் வரும் என்று தோன்றவில்லை. படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டார். மணி மாலையை உருட்டிக்கொண்டே மெல்லிய குரலில் கிருஷ்ண பஜனை செய்தார். சிறிது நேரத்தில் வழிபாடு முடிந்ததும் எழுந்து நடந்து ஏராளமான கையெழுத்துப் பிரதிகள் அடங்கிய பெட்டியை நோக்கிச் சென்று அதன் மேலிருந்த சைதன்ய சரிதாமிருதம் என்ற நூலைக் கையில் எடுத்துக் கொண்டார். மகான் சைதன்யரின் வாழ்வும் வாக்கும் நிறைந்த இந்த நூல் வைணவ இலக்கியங்களுள் தலைசிறந்த நூலாகக் கருதப்படுவதாகும். இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதுவே இப்போதைய பணி. இந்தியாவில் பிருந்தாவனத்தில் ராதா-தாமோதர கோவிலில் தங்கியிருந்த காலங்களிலும் இப்படித்தான் நள்ளிரவிலும் எழுத்துப்பணி நடந்து கொண்டிருந்தது. அமெரிக்காவிலும் அந்தப் பணியே தொடர்கிறது என்றாலும் ஒரு முக்கியமான வேறுபாடு. இந்தியாவில் மூலநூலத்தைப் படித்துப் படித்து ஆங்கிலப் பெயர்ப்பையும் இரவு பகலாகத் தன் கையாலேயே தாளில் எழுதிக் கொண்டிருப்பார். அமெரிக்காவிலோ அப்படியில்லை. மொழி-பெயர்ப்பை ஆங்கிலத்தில் சொல்லச் சொல்ல அதனை வாங்கிச் சேமித்துக் கொள்ளும் இயந்திரக் கருவி (Dictaphone) ஒன்று இருந்தது. பின்னர் யாராவது ஒரு எழுத்தரோ, பிரதி எடுப்பவரோ அக்கருவியினை மீண்டும் இயக்கி மொழிபெயர்ப்பினை எடுத்துக் கொள்ளலாம். அதிகாலையில் அன்றாடம் எழுந்து அமைதியாக சுவாமிகள் இந்த ஆன்மீக எழுத்துப் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்.

இதற்கிடையில் சுவாமிகளின் பிரச்சாரப்பணியில் ஒரு சிக்கல் எழுந்தது. சான்பிரான்சிஸ்கோ நகரில் வழக்கமாக மேற்கத்திய இசையும், கூத்தும் நடக்கும் ஒரு பெரிய ஹாலில் ஹரே கிருஷ்ண வழிபாடு நடத்த வேண்டும் என்று சில சீடர்கள் ஏற்பாடு செய்து விட்டார்கள். ஹிப்பிகள் நிறைந்த அத்தகு இடத்தில் ஆன்மீக வழிபாடு நடத்த வேண்டாம் என்று சிலர் தடுத்தனர்.

அயக்ரீவனும், சாம் என்பாரும் "சுவாமிகள் அந்த அரங்கில் ஏறி வழிபாட்டு நிகழ்ச்சியைத் தொடங்கி விட்டு வந்தால் போதும். ஏறத்தாழ நாலாயிரம் பேர் கூடத்தகும் அப்பெரிய மாளிகையில் அரே கிருஷ்ண மந்திரம் ஒலிப்பதில் தவறில்லை" என்று வாதிட்டார்கள் சுவாமிகளின் தீர்ப்புக்கு இந்த விவாதம் வந்தது. "ஹிப்பியாக மாறி நாடோடியாகத் திரிபவர்களுக்கும் ஆன்மீக உணர்வு வேண்டுமே! ஏதோ ஒரு மயக்கமும் போதையுமே ஆன்மீக ஒளி என்று நெறி தடுமாறிப் போகின்றவர்களை நல்வழிக்குத் திருப்புவதும் நமது பணி அல்லவா? எனவே நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று கூறி அது பற்றிய விவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

முகுந்தாவும், ஹார்வி கோகனும் தேவையான இசைக்கருவிகளுக்கு ஏற்பாடு செய்து விட்டனர். மேடை அலங்காரமும் முடிந்து விட்டது. நுழைவுக்கட்டணம் இரண்டரை டாலர் என்று விளம்பரப்படுத்தியிருந்தனர். குறிப்பிட்ட நாளன்று கூட்டம் நிரம்பி வழிந்தது. சுவாமி கிரியானந்தா ஒரு தம்புராவுடன் வந்திருந்தார். போதை மருந்தும், தூளும் அருந்துகின்ற ஹிப்பிகளின் கூட்டமே மிகுதி. ஊதுகுழலும், சிறு பறையும், கிட்டாரும், முரசும், புல்லாங்குழலும் என்றின்ன பல்வேறு இசைக் கருவிகளுடன் ஏராளமானோர் அந்த மன்றத்தில் நிரம்பி இருந்தனர்.

மோபி கிரேப், முகுந்தா இருவரும் மேடையிலேறி கிருஷ்ண வழிபாட்டைத் தொடங்கினர். பல்வேறு வண்ண விளக்குகள் மேடையைச் சுற்றிப் பளிச்சிட்டன. மேடையில் இசைக்கப்படும் பாடலுக்கேற்ற வண்ணம் மன்றத்திலிருந்தவர்கள் கையொலியும், இசையொலியும் எழுப்பினார்கள். இரவு 9-30 மணியளவில் கூட்டம் நிரம்பி வழியும் அந்த மன்றத்துக்குள் சுவாமிகள் நுழைந்தார்.

கீர்த்தனானந்தாவும், ரணசூராவும் சுவாமிகளை மேடைக்கு அழைத்துச் சென்றார்கள் கூட்டத்துக்குள் நீந்திச் செல்வது போல் சுவாமிகள் நிமிர்ந்த நடையோடு நேராக மேடைக்கு வந்ததும், அவரது பக்தர்கள் சங்கொலி எழுப்பினார்கள் மேடையில் விளக்குகள் பளிச்சென்று மின்னிட்டன. கிருஷ்ணன் தேரோட்டவும், பார்த்தன் போர் வீரனாகவும் வருகின்ற காட்சி, பாலக் கண்ணன் வெண்ணை உண்ணும் அழகிய தோற்றம், புல்லாங்குழல் ஊதும் நீலமேகக்கண்ணன் என்று இப்படி மேடையில் பாகவதத்தின் பல்வேறு

காட்சிகள் மாறி மாறி வந்து கொண்டேயிருந்தன. சுவாமிகள் மெல்லிய இருக்கையில் அமரவும், கூட்டத்தில் ஒரு அமைதி.

அமெரிக்கப் பெருநிலத்தில் அரே கிருஷ்ண இயக்கத்தின் வரலாற்றையும் தான் அதில் ஈடுபாடு கொண்டு பணி புரிவதையும் ஆலன் மேடையில் சுருக்கமாகக் கூறினார் பிரடெரிக் தெருவில் உள்ள தங்களது இயக்கத்தின் தலைமை நிலையத்தில் அன்றாடம் அதிகாலையில் நிகழும் அரிகிருஷ்ண வழிபாட்டில் கலந்து கொள்ளவும் அவையோருக்கு வேண்டுகோள் விடுத்தார். அதனைத் தொடர்ந்து சுவாமிகளும் அரே கிருஷ்ண இயக்கத்தைப்பற்றிச் சுருக்கமாக எடுத்துரைத்தார்

இந்தியாவிலிருந்து கொண்டு சென்றிருந்த ஆர்மோனியத்தை இயக்கிக் கொண்டே பின்னர் ஆலன் பாடத் தொடங்கினார் அந்த இசையொலியின் லயத்துக்கேற்ப அவையோரில் சிலரும் கையொலி எழுப்பிப் பாடினர். அரே கிருஷ்ண மந்திரத்தின் உச்சாடனம் ஓங்கி ஒலிக்கத் துவங்கியதும், அரங்கத்திலிருந்த சிலரும் மேடைக்கு வந்து இன்சக்குழுவில் கலந்து கொண்டனர்

செவிக்கு இனிமை தராத கடூரமான மேறகத்திய இசை எதிரொலித்த அந்த பெரு மன்றத்தில் கண்ணனின் நாமம் காற்றிலே தவழ்ந்தது. சுவாமிகள் பெரிதும் மகிழ்ந்தார். அதற்கேற்றாற்போல், புல்லாங்குழலை வாயிலே வைத்துப் பட்டுடை பளிச்சிட இசைக் கோலத்தில் இருக்கும் கண்ணனின் உருவம் அழகான ஓவியமாய் மேடையில் தோன்றியது. சுவாமிகளும் எழுந்தார். இறை உணர்வு மீக்கூர அந்த முதிய உருவம் தன்னையறியாது இசைக்கு எற்ப இலேசாக அசைந்து ஆடியது. இளைஞர்களின் உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது சிறிது நேரத்தில் கிருஷ்ண கானமும் நடனமும் அங்கு பொங்கி வழிந்தது சுவாமிகளின் காதில் கீர்த்தனானந்தா ஏதோ முணுமுணுத்தார். தள்ளாத வயதில் சுவாமிகள் களைத்து விடக் கூடாது என்னும் வேண்டுகோளே அது. கீர்த்தனை நின்றதும், சுவாமிகளுக்கு நேராக ஒலிபெருக்கி ஒன்று வைக்கப்பட்டது "ஓம் விஷ்ணுபாத பரம கம்ச அட்டோத்திர பக்தி சித்தாந்த சரஸ்வதி மக்ராஜாக்கு ஜே" என்று உரத்த குரலில் சுவாமிகள் முழங்கினார். 'அவையோருக்கு இறைவன் அருளால் எல்லா நலன்களும் அமையட்டும்' என்றும் கூறி மேடையை விட்டுக் கீழிறங்கினார். ஆணும் பெண்ணும் புகையும் வாடையுமாய் இருந்த அந்த மண்டபத்தை

விட்டு வெளியேறும்போது சுவாமிகள் சொன்னது இது தான்.'' இந்த மன்றம் ஒரு பிரம்மச்சாரிக்கு ஏற்றதல்ல.''

சான்பிரான்ஸிஸ்கோ நகரத்தில் கிருஷ்ணாய இயக்கத்தின் ஆன்மீகப்பணிகளுக்குத் துணை நின்ற சில தொண்டர்கள் சுவாமிகளிடம் சென்று சமயதீக்கையினை வேறுபாடின்றி எல்லோருக்கும் கொடுத்து விடக் கூடாது என்று கேட்டுக் கொண்டனர். அரே கிருஷ்ண இயக்கத்தில் சேர்ந்து விட்டு அதன் விதிமுறைகளைப் பின்பற்றாத சிலரது விபரீதப் போக்கே இதற்குக் காரணம் ஆகும். சுவாமிகளுக்கும் இக்கருத்தில் உடன்பாடு இருந்தது. அதிலிருந்து யாராவது இயக்கத்தில் சேர வந்தால், சுவாமிகள் ஓரிரு வினாக்களிலேயே வந்திருப்போரின் தகுதியையும், விருப்பத்தையும் கணித்து விட்டுப் பின்னரே அவர்கட்கு மதமாற்றமும் சமயதீக்கையும் செய்வார்.

ஒரு நாள் இரவு. வழிபாடு முடிந்து அங்கு கூடியிருந்தோர் கேள்வி கேட்டுச் சுவாமிகள் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் நேரம். தாடி வளர்த்துக் கொண்டிருந்த ஒரு இளைஞன் கையைத் தூக்கி சுவாமிகளின் கவனத்தைக் கவர்ந்தான்.

"என்னை உங்கள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்வீர்களா''

"சேர்த்துக் கொள்வதற்கு முன் இரண்டு வினாக்களுக்கு நீ பதில் சொல்ல வேண்டும்'' — இது சுவாமிகள்.

—சரி என்பது போல் அந்த இளைஞன் தலையாட்டினான்.

—கிருஷ்ணா என்பது யார்? ஒரு கணம் அமைதிக்குப் பின் பதில்.

—கிருஷ்ணனே கடவுள்.

—நீ யார்? — இது கேள்வி

—நான் கடவுளின் அடித்தொண்டன் — இது பதில்.

இப்படியொரு விவாதத்துக்குப் பின்னரே இறைபணித் தொண்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சமயதீக்கை செய்விக்கப் பெற்றனர். மேலை நாட்டுச் சூழ்நிலையில் பாலுணர்ச்சியின் வெளிப்பாட்டிலோ, மது அருந்துவதிலோ எந்த விதக் கட்டுப்பாடும் இன்றித் திரிந்தவர்களை காலப் போக்கில் தான் திருத்த முடியும் என்பதை உணர்ந்த சுவாமிகள், இயக்கத்தின் சட்ட திட்டங்களை உணர்ந்து மனம் மாறி வருவோரைத் தள்ளிவிட வேண்டாம் என்று இயக்கத்தில் சேர்த்துக் கொண்டார். நியூயார்க் சீடர்களைப் போலன்றி, இந்நகரத்தில்

சிலர் மறைவாகப் புகைப் பிடிப்பதிலும், வழிபாடு செய்யாமலேயே உணவு உண்ணுதலையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். காலப் போக்கில் அவர்களையும் இயக்கத்தின் சட்ட திட்டத்துக்குப் பணிந்து போகுமாறு செய்தமை சுவாமிகளின் கனிவுக்கும் கட்டுப்பாட்டுக்கும் சான்றாக அமைந்தது.

ஆஷ்பரி பகுதியில் நிறுவப் பெற்ற ராதாகிருஷ்ணா ஆலயத்தில் மதிய வழிபாடு முடிந்ததும் வந்திருந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. காலப் போக்கில் ஏறத்தாழ இருநூறுக்கு மேற்பட்ட ஹிப்பிகள் வந்து வழிபாட்டிலும் கலந்து கொண்டு பிரசாதம் பெற்றுச் சென்றார்கள் காலையில் அவ்வப் போது பழங்களும், பருப்பு வகைகளும் கொடுக்கப்பட்டன. மதிய உணவு தான் பல்சுவையும் பொருந்தியதாக இருந்தது பட்டாணி, கோதுமைக் களி, பீட்ரூட், காபேஜ், உருளைக் கிழங்கு வறுவல், சப்பாத்தி முதலியன. அந்தப் பகுதியில் நன்கு அறிமுகமான சீடர்கள் தங்களால் இயன்ற வகையில் செல்வந்தர்கள் சிலரிடமிருந்து நன்கொடை பெற்று வந்தமையால் வருகின்ற பக்தர்களுக்கும் ஹிப்பிகளுக்கும் உணவு வழங்க முடிந்தது அனைவரும் உணவு உண்ணும் வேளையில் ஹால் முழுதும் நிறைகின்றவாறு இசைத் தட்டின் வழி அரே கிருஷ்ண பஜனைப் பாடல்கள் இசைக்கப்பட்டன. இப்படி உணவையும் வழிபாட்டுச் சிந்தனையையும் ஒன்றாக இணைத்தது சுவாமிகளின் திட்டம். அதற்கேற்றவாறு அரே கிருஷ்ண அடியார்களின் தொகையும் இயக்கத்தின் வளர்ச்சியும் பெருகத் தொடங்கியது.

உணவு முடிந்ததும் குறிப்பிட்ட சிலர் சுவாமிகளின் இருக்கைக்குச் சென்று மனம் திறந்து பேசிக் கொண்டிருப்பர் இயக்கத்தைப் பற்றி பொது மக்களிடையே நல்ல சூழ்நிலை நிலவுதற்கு இத்தகைய சந்திப்புகளும் ஒரு காரணம் எனலாம். இருப்பினும் ஆஷ்பரி பகுதியில் ஹிப்பிகள் நடமாட்டம் அதிகமாக இருக்கிறதே என்றும் சிலர் கவலைப்பட்டனர். அவர்களும் இந்த ஆன்மீக இயக்கத்தில் திருந்தி விடுவர் என்ற நம்பிக்கையில் யாரும் எதிர்த்துப் பேசவில்லை

(தொடரும்)

சுவாமி விவேகானந்தரும் பசும்பொன் தேவரும்

— O. P. வாசுதேவன் —

நாம் மானுடப் பிறவி எடுத்திருப்பதன் நோக்கமே எல்லாம் வல்ல இறைவனை வழுத்தி அவரை அடைதல் ஆகும்.

இதன் அடிப்படையில் இறைவனை அடைவதற்கு முறையான இறுதியான எளிய வழி ஆன்மீக நெறியே.

இவ்வகையில் ஒரு ஆத்மன் உலகில் எங்கு பிறந்தாலும், எந்த நாட்டில் வளர்ந்தாலும், எத்தனைப் பிறவிகள் எடுத்தாலும், எம் மதத்திற்கும் மொழிக்கும் உரியவனாக இருந்தாலும், இறைவனோடு இரண்டறக் கலப்பதற்குரிய வழி ஆன்மீக நெறியே ஆகும்.

சுவாமி விவேகானந்தர் வங்கத்தில் பிறந்து தான் மறையும் வரை வேதாந்த மார்க்கத்தில் ஆன்மீக நெறியைக் கடைபிடித்துச் செயலாற்றி வருகின்றார்.

அவர் அமெரிக்கா சென்று சிகாகோவில் அகில உலக மத மகா சபையில் "இந்து மதம் தான் உலகில் சிறந்த மதம்" என்பதை எடுத்துரைத்த பின்பு இந்த உலகப் பெருமைக்கு உரியவன் அடியேன் அல்ல; தியாகச் செம்மல் கருணையின் இருப்பிடம் ஸ்ரீ பாஸ்கர சேதுபதி அவர்களே; ஸ்ரீ பாஸ்கர சேதுபதி அவர்களால் இந்து மதத்திற்கு உலகப் பெருமையும், அதனால் எனக்கும் புகழ் ஏற்பட்டுள்ளது. ஸ்ரீ பாஸ்கர சேதுபதி அவர்களுக்கு தான் நன்றிக் கடனைத் தீர்க்கும் வகையில், அடுத்து ஒரு மானுடப் பிறவி தமிழகத்தில் ஸ்ரீ பாஸ்கர சேதுபதி அவர்கள் பிறந்த புனித மண்ணில் கிடைக்க வேண்டுமென்று சுவாமி விவேகானந்தர் இறைவனிடம் வேண்டிக் கொள்கின்றார்.

சிகாகோ பிரசங்கத்தை முடித்து இந்து மதத்தின் கொடியை ஏற்றி விட்டுத் தாயகம் திரும்பிய நரேந்திரர் தமிழகத்திற்கு வருகை

தந்து இங்குள்ள திருக்கோயில்களையும் வழிபாட்டு நெறிமுறைகளையும் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளையும் கண்ணுற்ற பின்பு கூறுகின்றார். "நான் அமெரிக்கா செல்வதற்கு முன்பு தமிழகத்திற்கு வந்திருந்து இங்குள்ள திருக்கோயில்களையும், வழிபாட்டு நெறிமுறைகளையும், சைவ சித்தாந்தத்தின் அருமைகளையும், தமிழ் மொழியின் பெருமையையும் அறிந்து சென்றிருப்பேனேயானால், அமெரிக்காவில் இந்து மதம் தான் உலகில் சிறந்தது என்று பேசியிருக்க மாட்டேன். அனைத்திற்கும் மேலான சைவ சமயமே சிறந்தது என்றும், அதற்குரிய மொழி தமிழ் மொழி என்பதையும், அதற்கேற்ற இடம் தமிழக மண் தான் என்பதையும் என் மார் தட்டிக் கூறி இருப்பேன். அம் மாபெரும் புகழை அடையாத அபாக்கியவனாகி விட்டேன். இப்பேர்ப்பட்ட அரும் பெரும் நெறியை நான் அனுபவிக்க எனக்கு அடுத்த பிறவி இத் தமிழ் நாட்டிலேயே அமைக்க வேண்டுமென்று இறைவனிடம் மீண்டும் வேண்டிக்கொள்கின்றார்."

தமிழகத்திற்கு வருகை தந்த சுவாமி நரேந்திரர் இராமேஸ்வரத்தில் சைவ சமய சாதுக்கள் சித் சங்கத்தில் ஆன்மீகக் கலந்துரையாடல் செய்கின்ற பொழுது திருநீற்றின் பெருமையைச் சற்று குறைவாக மதிப்பிட்டு விடுகின்றார் அங்கிருந்த வயோதிகச் சாது ஒருவர் ஆவேசத்துடன் எழுந்து, " நரேந்திரா! நீ வேதாந்தி வங்கத்தில் பிறந்தவன், தமிழக மண், மொழி, சைவ சமயம் போன்றவற்றின் சிறப்புக்களைத் தெளிவர அறியாத நீ திருநீற்றின் பெருமையை அலட்சியம் செய்ததால், நீ அடுத்த பிறவி எடுத்து தமிழ் மொழிக்கே உரியவன் ஆகி, சைவ சித்தாந்தியாக ஒழுகி நீ மறையும் வரை விபூதியை இமைப் பொழுதும் மாறாது அணியக் கடவாய் " என்று சாபமிட்டு விடுகின்றார் சைவ சாதுவின் சாபத்தை நிறைவேற்றும் வகையிலும் சுவாமி, பசும்பொன்னாகத் தோற்றம் எடுக்கின்றார் என்றும் அனுமானிக்கலாம்.

முன் காலத்தில் காசியிலிருந்து ராமேஸ்வரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி போன்ற திருத்தலங்களுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் பசும்பொன் வழியாகச் செல்லும் போது அவர்களை இன்முகத்துடன் வரவேற்று, தங்க இடவசதி அளித்து, உணவளித்து, உடையளித்து அனுப்பி வைப்பது திரு. உக்கிரபாண்டியன் இல்லாளாகிய இந்திராணி அம்மையாரின் சிறப்பான குணமாக இருந்தது. அவரின் நீண்ட தாளைய புண்ணிய பணியைப் பாராட்டி சைவ முனிவர்

ஒருவர் " அம்மா! வருந்தற்க!! நீ செய்த தவத்தின் பயனாக சிவ-சூரியன் போல் ஒருவன் உன் மணி வயிற்றில் தோன்றுவான் " என்று அருளாசி கூறி விபூதி அளித்து விட்டுச் சற்று நேரத்தில் மறைந்து விடுகின்றார். அம்முனிவரின் நல்லாசியை நிலைநிறுத்தும் வகையிலும் பசும்பொன் தேவராக சுவாமி விவேகானந்தர் இந்திராணி அம்மையாரின் திருமகனாகத் தோன்றுகிறார் என்று கொள்வதில் தவறில்லை.

1. சுவாமி விவேகானந்தர் 1902-ல் மறைகின்றார்.
   பசும்பொன் தேவர் 1908-ல் தோற்றமர்கின்றார்

2. இந்திய வடகிழக்குக் கடற்கரையில் சுவாமி தோன்றினார்.
   இந்திய தென்கிழக்குக் கடற்கரையில் பசும்பொன் தோன்றுகிறார்.

   (இருவருமே கிழக்குக் கடற்கரையில் தோன்றுகிறார்கள்)

3. சுவாமி விவேகானந்தர் வேதாந்தி. பசும்பொன் தேவர் சித்தாந்தி.

4. விவேகானந்தர் காவியாடைத் துறவி. பசும்பொன் தேவர் வெள்ளையாடைத் துறவி.

5. " மக்களுக்குச் செய்யும் சேவையே மகேசனுக்குச் செய்யும் சேவை " என்றார் விவேகானந்தர்.

   " தேசியம் என் உடல், தெய்வீகம் என் உயிர் " என்றார் பசும்பொன் தேவர்.

6. வங்கத்தில் விவேகமுள்ள பிராமணர் குலத்தில் பிறந்தார் விவேகானந்தர்

   தமிழகத்தில் வீரமுள்ள மறவர் குலத்தில் தோன்றினார் பசும்-பொன் தேவர்.

7. விவேகானந்தர் தன் தலைப்பாகையை நீக்கியதே இல்லை. பசும்பொன் தேவர் தனது நீண்ட திருமுடியை இறக்கி-யதேயில்லை.

8. மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை மூன்றுமில்லாத தெய்வீக வாழ்க்கை வாழ்ந்தவர் சுவாமி விவேகானந்தர்.

மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை இம் மூன்றையும் அறவே நீக்கி அணுவளவும் மாசுபடாத தேசீய - தெய்வீக வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார் பசும்பொன் தேவர்

9. இந்தியாவில் மத விஷயத்தில் இந்து மதத்தின் பெருமையை உலகுக்கு எடுத்துரைத்து இந்து மதத்திற்கு உலகில் மாபெரும் புகழ் படைத்தார் சுவாமி விவேகானந்தர்.

தெய்வீக நம்பிக்கையில் தான் தேசத்தை நிர்ணயிக்க முடியும் என்ற அடிப்படையில், தான் இந்தியாவிலேயே முதன் முதலாக நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் இருமுறைகள் வெற்றி பெற்று இந்திய அரசியல் அமைப்பில் மாபெரும் புகழை முதன் முதலாக அமைக்கின்ற பசும்பொன் தேவர் இந்து மதத்தின் காவலனாகத் தமிழகம் முழுவதும் ஆன்மீகப் பிரச்சாரம் செய்தவர்.

10. தன்னை ஈன்ற அன்னையின் அம்சமாகக் கண்ணில் படும் பெண்களைப் பாவிக்கின்றார் சுவாமி விவேகானந்தர்

காணும் பெண்களையெல்லாம் உலகத்தை ஈன்ற அன்னை பராசக்தியாகவே பாவித்தார் பசும்பொன் தேவர்

11. உலக மத ஒற்றுமைக்காகவும் அமைதிக்காகவும் உழைத்தார் சுவாமி விவேகானந்தர்

உலக மக்கள் விடுதலைக்காகவும், உலக அமைதிக்காகவும், உலக நாடுகள் ஒற்றுமைக்காகவும் உழைத்தார் பசும்பொன் தேவர்.

12. விவேகானந்தர் தன் வாழ்நாளில் முக்கால் பகுதியை இந்து மதத்தின் புகழ் பரப்பியே கழித்தார்.

பசும்பொன்னார் மக்களின் நலனுக்காகத் தன் வாழ்நாளில் முக்கால் பகுதியைச் சிறையிலேயே கழித்தாலும் இந்து மதத்தின் பெருமையை மறந்தாரில்லை

13. சுவாமி விவேகானந்தர் தன் வாழ்நாளில் இயற்கை வைத்தியத்தைத் தவிர செயற்கை வைத்தியம் செய்ததில்லை.

பசும்பொன் தேவர் இயற்கை வைத்தியத்தையும், ஆயுர்வேத வைத்தியத்தையும் கூட ஏற்றுக் கொள்ளவில்லை.

14. சுவாமி விவேகானந்தர் இந்து மதத்தினர்களாலும் பிற மதத்தினர்களாலும் பாராட்டுகளைப் பெறுகிறார்.

பசும்பொன் தேவர் துறவிகளாலும், தேசியவாதிகளாலும், தெய்வீகத் திருத்தொண்டர்களாலும், தமிழ்ப் புலவர்களாலும், ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட சாதியினர்களாலும் உலக அறிஞர் பெருமக்கள் பலராலும் பாராட்டிற்கு உரியவர் ஆவார்.

15. வங்கத்தில் பிறந்த விவேகானந்தருக்கு தமிழகத்தில் குமரி முனையில் நினைவாலயம்.

தமிழகத்தில் பிறந்த தேவர் பெருமானுக்கு இமயத்தில் சிவானந்தர் ஆலயத்தில் புகழ் ஆலயம்.

16. வங்கத்தில் பிறந்த விவேகானந்தருக்கு தமிழகத்தில் பிறந்த ஸ்ரீ பாஸ்கர சேதுபதி அவர்கள் மீது மாறாத பக்தி.

தமிழகத்தில் பிறந்த தேவர் மகனுக்கு வங்கத்தில் பிறந்த 'நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்' அவர்கள் மீது ஆழமான நட்பு.

17. சுவாமி விவேகானந்தர் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் எப்போதும் இந்து மதத்தின் புகழ் பரப்பத் தவறியதில்லை. பசும்பொன் தேவர் எவர் செய்த தவற்றையும், யார் செய்த பெருமையையும் அவ்வப்போது சுட்டிக்காட்டி குற்றத்தைக் கண்டிக்காமலும், பெருமையைப் பாராட்டாமலும் இருந்ததில்லை.

18. சுவாமி விவேகானந்தர் தனது ஆன்மீகப் பேச்சைத் துவக்கும் போது "சகோதர சகோதரிகளே" என்று தான் துவக்குவார். பசும்பொன் தேவர் தனது ஆன்மீகப் பேச்சைத் துவக்கும்போது "அன்னை பராசக்தியின் அம்சங்களே, மானிட உருவில் அமர்ந்திருக்கும் மனித தெய்வங்களே" என்று தான் தொடங்குவார்.

19. சுவாமி விவேகானந்தர் சிகாகோ பிரசங்கத்தில் இந்து மதத்தின் பெருமைகளை ஆங்கில மொழியில் எடுத்துரைக்கும் போது ஆங்கில மொழியில் உள்ள மிக அதிகமான புனிதமான வார்த்தைகளைக் கையாண்டு பேசியதை அறிந்த அமெரிக்கப் பத்திரிக்கைகள் "சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவால் உலகம் முழுவதும் பரவியிருக்கின்ற எங்களது ஆங்கில மொழியே புனிதம் பெற்றுவிட்டது" என்று பாராட்டுகின்றன.

பனாரஸ் பல்கலைக் கழகத்தில் பசும்பொன் தேவரின் மூன்று மணி நேர ஆங்கிலச் சொற்பொழிவைக் கேட்ட ஆங்கில மொழி அறிஞர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் "உலகம் முழு-வதும் ஆட்சி செய்கின்ற ஆங்கில மொழியை பசும்பொன் சிங்கம் மூன்று மணி நேரம் அடக்கி ஆண்டு விட்டது" என்று போற்றுகின்றார்.

20 இராஜாஜி இளைஞராக இருக்கும் போது சுவாமி விவேகானந்-தரால் பாராட்டப் பெறுகின்றார்.
இராஜாஜி தன் வயோதிக நிலையில் இளைஞராக இருந்த பசும்பொன் தேவரைப் பாராட்டுகின்றார்

21. சுவாமி விவேகானந்தர் தன் விருப்பம் போல் தன் உடலை விட்டு உயிர் பிரியும் வகையில் தானே சமாதியடைகின்றார்.
பசும்பொன் தேவர் தன் விருப்பம் போல் தான் பிறந்த நாளிலேயே (30-10-1908 30 10-1963) தனது பூத உடலை விட்டு உயிரைப் பிரித்து, தோன்றி, மறைந்த, இரு நாட்-களையும் ஒன்றாக்கிக் கொள்கின்றார்.

22. சுவாமி விவேகானந்தர் இந்து மதத்தின் பெருமைகளை உலக நாடுகளில் எடுத்துரைத்தது மட்டுமல்லாது அந்நிய நாடாகிய அமெரிக்காவில் முதன்முதலாகப் பிள்ளையார் கோவிலையும் உண்டாக்கினார்.
பசும்பொன் தேவர் சைவ சித்தாந்த நெறிகளைத் தான் மட்டும் கடைப்பிடித்ததோடு மட்டுமல்லாது, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக யாராலும் செய்யமுடியாமல் இருந்து வந்த தாழ்த்தப்பட்ட சாதியினர்களின் ஆலயப் பிரவேசத்தைத் தமிழகத்தில் 1938 இல் மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவிலில் தானே முன்நின்று நடத்தி வைத்தவர்களில் தானும் பெரும் பங்கேற்கின்றார். பர்மாவுக்குச் சென்று திருக்குறளின் பெருமையைப் பேசுகின்றார்.

23. சுவாமி விவேகானந்தர் இந்து மதத்தின் பெருமையை பிற மதத்தினர்களோடு ஒப்பீடு செய்யும் போது மற்றவர்களைக் கிணற்றுத் தவளைக்கும், குளத்துத் தவளைக்கும், ஆற்றுத் தவளைக்கும் உதாரணம் காட்டி விட்டு தனது மதத்தை கடல் தவளைக்குச் சமம் என்று பேசுவார்.
பசும்பொன் தேவர் சைவ சமயத்தின் பெருமையை பிறரிடம் கூறும்போது மற்ற மார்க்கங்களை கிணற்று ஆமைக்கும்,

குளத்து ஆமைக்கும் சமம் என்று கூறிவிட்டுத் தனது சமயமாகிய சைவத்தைக் கடல் ஆமைக்குச் சமம் என்று பேசுவார்.

24. இந்து மதத்தின் புகழுக்கும் வளர்ச்சிக்கும் சுவாமி விவேகானந்தர் காரணம்.

இந்து ஆலயம் மற்றும் மதத்தினர்களின் பாதுகாப்பிற்கும், நாஸ்திக வளர்ச்சியின் தடைக்கும் பசும்பொன் தேவர் தான் முதற் காரணம்.

பசும்பொன்னார் இந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டம் போடப்பட்ட பெருந்தலைவர்களில் ஒருவர். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற மாபெரும் கம்யூனிச தத்துவத்திற்கு முதன்முதலாக உயிர் கொடுத்து அதை நிருபிக்கும் வகையில் தன்து சொந்த நிலமான 33½ கிராமங்களையும் அனுபவித்து வந்தவர்களுக்கு ஒப்படைத்தார். தமிழகத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், போராட்டம் போன்ற வார்த்தைகளுக்கு உயிர் அளித்து அதை மதுரை மகாலட்சுமி மில் தொழிலாளர்கள் பிரச்சினையில் செய்தும் காண்பித்தார். தமிழகத்தில் பல தொழில் நிறுவனங்களில் அரசியல் கலப்பற்ற தொழிற் சங்கங்களை நிறுவியவரும் தேவரே.

சுவாமி விவேகானந்தரின் உருவ அமைப்பையும், எழில்மிகு தோற்றத்தையும், விவேகமான வீரமான ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் — பசும்பொன்னாரின் அழகுமிகு முக அமைப்பையும், வீரமான, விவேகமான, நேர்மையான, தேசீய - தெய்வீக தமிழ்-ஆங்கிலச் சொற்பொழிவுகளை, வார்த்தைகளையும் உற்றுநோக்கினால் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகவும், சிறப்பாகவும் இருக்கும்.

தேவர் பெருமகன் அவர்கள் தன்னுடைய ஆன்மீகச் சொற்பொழிவிலும் சரி, அடிக்கடி தேசியசொற்பொழிவிலும் சரி இடையில் உதாரணம் கொடுக்கையில் "சுவாமி விவேகானந்தரைப் போல் வாழுங்கள். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் நெறிமுறைகளைக் கடைப்பிடியுங்கள். அன்னை சாரதா தேவியாரின் நல்வழியைப் பின்பற்றுங்கள் காளி தெய்வத்தை வணங்குங்கள்" என்று கூறுவது தனிச்சிறப்பாகும். பசும்பொன் தேவராக சுவாமி விவேகானந்தர் உருவெடுத்திருந்த போதிலும் போன ஜென்ம வாசனை போகவில்லை என்றே கூறலாம்.

திருச்சிற்றம்பலம்

வீர விவேகானந்தப் பசும்பொன்னின் திருவடி வாழ்க !

வரப்பெற்றோம்

வானில் பறந்த வெண்புறா

மறைந்த பிரதமர் இந்திரா காந்தியினை வெண்புறாவாக உவமித்து ஓய்வு பெற்ற தமிழாசிரியர் தா. சுப்பையன் என்னும் நேரியனார் அச்சிட்டு அனுப்பிய சிறு கவிதைத் தொகுதி சுவைபட அமைந்துள்ளது. தமிழக அரசின் விருது பெற்ற இத்தமிழ்ப் புலவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும், இலக்கியப் பணியிலிருந்து ஓய்வு பெறவில்லை என்று தெரிகிறது. சொல்லோட்டமும், கற்பனை வளமும் நிரம்பிய இவரது கவிதைகளில் இந்திய நாட்டுப் பற்றும் தெள்ளிதின் விளங்குகிறது. இந்திரா காந்தி பற்றி வருகிற

நாட்டிடைப் பரவி நலன் பல ஓங்கப்
பாலையில் காணும் பைம்புனல் ஆறாய்
கொணர்ந்த செல்வி குணமிகு அன்னை—
பொன்னொளிர் பரிதியும் தண்ணொளிர் மதியமும்
உன்னரும் ஆட்சியைப் பொன்னெனச் செப்பிடும்—

என்பன போன்ற வரிகள் உள்ளத்தைத் தொடுவன. மரபுவழிக்-கவிஞராகிய திரு. சுப்பையன் அவர்களின் அருந்தமிழ்ப் பெருந்-தொண்டு வாழ்க வளர்க எனப் பாராட்டுகிறோம்.

— ஆசிரியர் —

யாப்பருங்கலமும் காரிகையும்

டாக்டர் சுயம்பு
திருச்செந்தூர்.

செய்யுள் இலக்கணம் கூறும் நூல்களாகிய யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை ஆகிய இரண்டனுள் முன்னதே முதல்-நூலென்றும், பின்னதை வழி நூலென்றும் கருதுவர். முன்னோன் முடிபொருங்கொத்து பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி அழியா மரபினது வழி நூலாகும் என்னுங் கருத்துப்படி, மேற்கூறிய இரண்டு நூற்களுக்கும் இடையில் காணப்படும் சிற்சில வேறுபாடுகளைக் குறிப்பிட்டுக் காட்டுவதே இக் கட்டுரையாகும். யாப்பருங்கலத்தைக் குணசாகரரும், காரிகையினை அமிதசாகரரும் எழுதினர் என்று கூறுவர்.

— ஆசிரியர் —

தமிழ் யாப்பிலக்கணச் செய்திகளை மட்டும் விளக்குகின்ற நூல்களுள் முழுமையாகக் கிடைத்திருப்பன யாப்பருங்கலமும் யாப்பருங்கலக் காரிகையுமாகும். இவ்விரு நூல்களும் ஒன்றுக்கு ஒன்று நெருங்கிய தொடர்புடையதாம் என்பது நூற்பெயரால் விளங்கும். நுவல் பொருளிலும் இரண்டும் பெரும்பான்மை ஒரே கருத்துடையவை. இருப்பினும் ஆங்காங்கே மிகச் சிறிய கருத்து வேறுபாடுகளும் உள்ளன. இவ்வேறுபட்ட செய்திகள் மட்டும் இவண் ஆராயப்படுகின்றன.

1. நூலமைப்பு:

இரு நூல்களும் சமண சமயத் தெய்வ வணக்கத்தோடு தொடங்குவதனால் நூலாசிரியர்கள் சமணர்கள் என்பது புலனாம். உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று உட்பிரிவுகள் இரண்டிலும் உள்ளன. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, ஓசை என்னும் செய்யுள் உறுப்புகள் உறுப்பியலில் விளக்கப்படுகின்றன. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா போன்ற செய்யுட்களின் அமைப்புச் செய்யுளியலிலும், ஒழிந்த செய்திகள் ஒழிபியலிலும் விளக்கப்படுகின்றன.

யாப்பருங்கலம் அகவல் யாப்பில் உள்ளது. மூன்று இயல்களிலும் முறையே 53, 40, 3 பாக்கள் உள்ளன[1] உறுப்பியல் மட்டும் எழுத்தோத்து, அசையோத்து, சீரோத்து, தளையோத்து, அடியோத்து, தொடையோத்து என ஒத்துப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. யாப்பருங்கலக் காரிகை கட்டளைக் கலித்துறையான் இயன்றதாகும். மூன்று இயல்களும் முறையே 18, 28, 11 காரிகைகளைக் கொண்டுள்ளன. இவை தவிர, தற்சிறப்புப்பாயிரம், அவையடக்கம் பற்றிய காரிகைகள் மூன்று உண்டு.

2. கருத்து வேற்றுமை :

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, ஓசை என்பன பிறழாது அமைவதே யாப்பு என்னும் விளக்கம் யாப்பருங்கலத்தில் (1) காணப்படுகின்றது. இவ்விளக்கம் காரிகையில் இல்லை. ஆனால் யாப்பிற்குரிய விளக்கத்தைத் தொல்காப்பியம் (செய்யுளியல், 74) தருகின்றது. எழுத்து, அசை, சீர், தளை, அடி வரையும் அமைந்த உறுப்புகள் யாவும் கருதிய பொருள் முழுமையாகப் புலப்படும் வகையில் ஒத்திசைந்து அமைதலே யாப்பாகும் என்பது அவ்விளக்கம்.

அதனுள் தொடையும் ஓசையும் இடம் பெறவில்லை. ஏனெனில் தொல்காப்பியம் எழுத்து முதல் அடி வரையுள்ள உறுப்புகளுக்குள்ளேயே தொடை, ஓசை என்னும் ஒலிக் கூறுகள் அமையப் பெறுகின்றன எனக் கருதுகின்றது. இதனை,

அடியுள் ளனவே தளையொடு தொடையே (32)
அடியிறந்து வருதல் இல்லென மொழிப (33)
அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே (34)

என்னும் செய்யுளியல் நூற்பாக்கள் புலப்படுத்துகின்றன.

2. 1 அசையுறுப்புகள்

அசைக்கு உறுப்பாக வரும் எழுத்துகளைச் சுட்டுவதில் இரண்டும் சிறிது வேறுபடுகின்றன. உயிர், மெய், உயிர்மெய், குறில்-நெடில், அளபெடை, வன்மை, மென்மை, இடைமை, 'சார்பில் தோன்றும் தன்மைய' (குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்), ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம் என்னும் 'ஐம்மூவெழுத்தும் அசைக்கு உறுப்பே' என யாப்பருங்கலம் (2) வரையறுக்கிறது. இவற்றுள் ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம் என்னும் இரண்டனையும் நீக்கி, ஏனைய பதின்மூன்றனையும் காரிகை (4) எடுத்துரைக்கின்றது.

ஔகாரம் இடம்பெறும் சொற்கள் தமிழில் மிக அரிது என்பதாலும் மகரக் குறுக்கம் இடம்பெறுகின்றமையால் அசை அமைப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படுதல் இல்லை என்பதாலும் காரிகை இவ்விரண்டனையும் தவிர்த்துள்ளது. மேலும், 'சார்பில் தோன்றும் தன்மைய' என்று குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்னும் மூன்றனை மட்டும் உணர்த்துவதன்வழி யாப்பருங்கலம் தொல்காப்பியக் கோட்பாட்டினை உடன்படுகின்றது.[8] ஆனால் காரிகையின் சார்பெழுத்துக் கோட்பாடு வேறுபட்டது இந்நூல் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம் என்னும் மூன்றனையும் 'குறுகிய மூவுயிர்' என ஒருசேரக் குறிப்பிடுவதன்வழிச் சார்பெழுத்துக் கோட்பாட்டில் தான் யாப்பருங்கலத்தினின்றும் வேறுபடுதலைக் குறிப்பாக உணர்த்துகிறது. இதன் கோட்பாடு நன்னூல் போன்றவற்றைச் சார்ந்தது எனலாம்.

இவ்விரு நூல்களும் அசைக்கு உறுப்பாகும் எழுத்துக்களைக் குறிப்பிடும் முறை சீரியதாக இல்லை. உயிர், மெய் எனக் குறிப்பிட்ட பின்னர், குறில், நெடில், வன்மை, மென்மை, இடைமை என்னும் அவற்றின் உட்பிரிவுகளையும் ஒருசேரக் கொண்டு எண்ணி வகை செய்கின்றன.[4]

குறிப்பு, ஏவல், தற்சுட்டு என்னும் மூன்று சூழல்களில் மட்டும் தனிக்குறில் தனியசையாக (நேரசையாக) வருவதற்குரியது என்பது யாப்பருங்கலக் (7) கருத்து. சொல் முதலில் விட்டிசைத்து வரும்போது மட்டும் தனிக்குறில் தனியசையாக வரும் என்பது காரிகையின் (51) கருத்து. குறிப்பு, ஏவல், தற்சுட்டு என்னும் மூன்று சூழல்களிலும் தனிக்குறில் விட்டிசைத்து வருதற்குரியது. இக்கருத்தினை யாப்பருங்கலம் விரிவாக விளக்குகின்றது. விட்டிசைத்தலுக்கான சூழலைக் காரிகை சுட்டாமல் தொகுத்துரைக்கின்றது.

ஒற்றளபெடை அலகு பெறும் எனக் குறிப்பிடும் யாப்பருங்கலம் (3) அஃது எத்தகைய அலகு பெறும் எனச் சுட்டவில்லை. ஆனால் காரிகை (50) 'ஒற்றளபாய்விடின் ஓர் அலகாய்' எனச் சுட்டிக் கூறுகின்றது. நேரசை இங்கு ஓர் அலகு எனக் குறிக்கப்படுகின்றது.

2. 2. ஐகாரக்குறுக்கம்

சொல்லின் ஈற்றிலும் இடையிலும் இணைந்தும் வருகின்ற ஐகாரம் இணையசை (நிரையசை) ஆக அமையும் என்று யாப்பருங்கலம் (9) கூறுகின்றது. இத்தகைய ஐகாரத்தை ஐகாரக் குறுக்கம் என்று உரையாசிரியர்களும் நன்னூல் (95) போன்ற நூல்களும் கூறுகின்றன.

1. ஆவிரை 2. ஆனையன் 3. ஆனையையும் தவளையை இங்கு ஐகாரம் ஈற்றிலும் (1) இடையிலும் (2) இணைந்தும் (3) வந்து முறையே கூவிளம், கூவிளம், கூவிளங்காய், கருவிளம் எனும் நிரையசை கொண்ட சீர்களை அமைத்துள்ளது. 2, 3 சூழல்களில் ஐகாரம் அகரமாகச் செயற்படுகின்றது.[5] இக்கருத்தினைக் காரிகை வேறு வகையாகத் தெரிவிக்கின்றது. 'ஐகார நைவேல் ஒருங்கு குறிலியல்' என்பது காரிகையின் (50) கூற்று. ஐகாரக் குறுக்கம் குறிலைப் போன்று அசையின் உறுப்பாகச் செயற்படும் என்னும் இக்

செய்தி, யாப்பருங்கலத்தைவிடப் புலப்பாடு தெளிவற்றதாக உள்ளது. ஐகாரத்தை ஓரிடத்து நெடிலாகவும் பிறிதோரிடத்துக் குறிலாகவும் கருதுகின்ற போக்கினை யாப்பிலக்கணத்தில் காணமுடிகின்றது. ஐகாரம் குறிலாகவும், நெடிலாகவும் கருதப்பட்டு வந்த தன்மையே இதற்குக் காரணமாகும். இவ்வெழுத்தை நெடில்களோடு சேர்த்துக் கூறும் தொல்காப்பியம் (நூன் மரபு 4, மொழிமரபு 24) பிறிதோரிடத்து 'ஐகாரம் குறிலாக வருவதற்கும் உரியது' என்று கூறியிருப்பதை இங்குக் குறிப்பிடலாம். தொல்காப்பியக் காலத்திய இந்த ஒலியுறழ்ச்சியே பிற்காலத்தில் ஐகாரக்குறுக்கம் என்னும் ஒன்று கூறப்படுவதற்கு அடித்தளமாக அமைந்தது. உண்மையில் ஐகாரம் ஒரு சூழலில்கூடக் குறுகவில்லை. சொல்லின் மூவிடத்தும் ஐகாரம்குறுகும் என்னும் விளக்கத்தின் மூலம் இலக்கண நூல்கள் (நன்னூல், இலக்கண விளக்கம் போல்வன) இதனை வெளிப்படுத்துகின்றன. சொல்லின் உறுப்பாக அமைவதே எழுத்தின் தலையாய நோக்கம் அல்லது செயற்பாடு. ஐகாரமோ சொல்லில் வரும்போது (செயற்படும்போது) குறிலாகவே (ஒரு மாத்திரை) ஒலிக்கின்றது. எனவே இவ்வொலியே ஐகாரத்தின் இயல்பு. இவ்வாறிருக்க, ஐகாரத்தை நெடில் எனக் கொண்டு, அது சொல்லில் வரும்போது குறிலாக அமையும் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? வடமொழியைப் பின்பற்றி முற்காலத் தமிழ் இலக்கணிகள் சிலர் ஐகாரத்தை (ஔகாரத்தையும்) ஒரு நெடிலாக ஏற்றனர். அதன் விளைவே பிற்கால எழுத்திலக்கணிகளும் யாப்பிலக்கணிகளும் ஐகாரத்தைக் குறில் எனவும் நெடிலெனவும் உறழ்ந்து கூறுதற்குக் காரணமானது. மேலும் தொல்காப்பியம் உள்ளிட்ட நூல்கள் ஐகாரத்தை 'அய்' என்னும் கூட்டெழுத்தாகவும் எழுதலாம் என்று குறிப்பிடுவதையும் இங்குச் சுட்டலாம்.

2. 3. சீர்கள்

யாப்பருங்கலம் (10) இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் என்னும் மூன்றனையும் சீர் வகையாகக் குறிப்பிடுகின்றது.

> இயற்சீர் உரிச்சீர் பொதுச்சீர் என்று
> மயக்கற வகுத்த சீர்மூன் றாகும்

மேலும் இந்நூல் இம்மூன்று வகையோடு ஒத்த தன்மையற்றதாக ஓரசைச் சீர் என்னும் ஒன்றனையும் (14) சுட்டுகின்றது. ஆனால் காரிகை (6) இந்நால்வகையினையும் ஒத்ததன்மையுடையனவாகக்

கருதுகின்றது. மேலும், சீரின் அமைப்புப் பற்றி ஓரசைச் சீர், ஈரசைச் சீர், மூவசைச் சீர், நாலசைச் சீர் எனப் பெயரிடும் பான்மையும் காரிகையில் காணப்படுகின்றது

யாப்பருங்கலத்தில் சீர்கள் எவ்வாறு அமைக்கப்படும் என்ற விளக்கம் இல்லை. ஆனால் காரிகையில் (8) இத்தகைய விளக்கம் இடம்பெறாதபோலும், தேமா, தேமாங்காய், தேமாங்கனி போன்ற வாய்பாட்டுச் சான்றுகள் கூறப்பட்டுள்ளன.[6]

சீர்கள் ஒன்றனோடு ஒன்று தளையும் வகை பற்றிக் கூறிய யாப்பருங்கலம் ஓரசைச்சீர்களும் பொதுச்சீர்களும் தளையும் வகையைக் கூறவில்லை. ஆனால் இக்குறைபாடு காரிகையில் (8) தவிர்க்கப்பட்டுள்ளது.

> கண்ணிய பூவினங் காய்ச்சீர் அனைய; கனியொடொக்கும்
> ஒண்ணிழற் சீரசைச் சீரியற் சீரொக்கும் ...

தளை பற்றிய இலக்கணம் யாப்பருங்கலத்தில் (17) மட்டுமே தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

> சீரொடு சீர்தலைப் பெய்வது தளை

மேலும், எழு வகைத்தளைகள் பற்றிய விளக்கமும் காரிகையை விட யாப்பருங்கலத்திலேயே எளிமையும் தெளிவும் கூடியதாக அமைந்துள்ளது.

2. 4 : தொடைகள்

தொடை பற்றிய வரையறையினை யாப்பருங்கலம் (33) தருகின்றது.

> தொடையே அடியிரண் டியையத் தோன்றும்.

இரண்டு அடிகளுக்கு இடையே அமைவது தொடை எனக் கூறும். இந்நூல் (34) ஓர் அடியினுள்ளேயே அமைவதாகிய இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்னும் தொடைகளையும் விளக்குகின்றது. இணை முதலிய சீர்களுக்கு இடையே அமைவன ஆகும். இந்நூல் இத்தகைய சீர்த் தொடைகளையும் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்னும் அடித்தொடைகளோடு ஒருசேர வைத்து இலக்கணம் கூறுகின்றது. செந்தொடை, இரட்டை, அந்தாதி என்னும் மூன்று தொடைகளும் இறுதியில் விளக்கப்படுகின்றன.

யாப்பருங்கலக் காரிகை தொடையின் வரையறையினைச் சுட்டவில்லை. ஆனால் இந்நூல் மோனை முதலிய அடித்தொடைகளை-யும் செந்தொடை, இரட்டை அந்தாதியையும் சீர்த்தொடைகளை-யும் தனித்தனியே (16, 17, 19) விளக்குகின்றது. இதனால் இந்நூல் அடித்தொடைகளையும் சீர்த்தொடைகளையும் ஒரு சேர எண்ண-வில்லை எனலாம். மேலும் வருக்கம், நெடில், இனம் ஆகிய எழுத்-துகள் பற்றி அமையும் மோனை, எதுகைத் தொடைகள், உயிரெது-கை. ஆசிடையிட்டு அமையும் எதுகை, மூன்றாம் எழுத்து ஒன்றி அமையும் எதுகை பற்றிய செய்தியும் காரிகை ஒழிபியலில் (55) கூறப்பட்டுள்ளது. இத்தொடைகள் சிறப்புடையன அல்ல என்பதால் ஒழிபியலில் கூறப்படுகின்றன என்பர் உரையாசிரியர்கள்.

இரண்டாம் எழுத்து ஒன்றியை வதே எதுகை (யாப்பருங்கலம் 36)

இரண்டாம் வழுவா எழுத்தொன்றின் மாதே எதுகை (காரிகை 16)

என்று கூறிய இலக்கண நூல்கள், இவ்விலக்கணத்தினின்றும் வேறு-பட்ட நிலையிலும் திருக்குறள் முதலிய நூல்களில் செய்யுட்கள் அமைந்திருத்தலைக் கருத்திற் கொண்டு, உயிரெதுகை, இன எதுகை போல்வனவற்றையும் கூறுகின்றன. இத்தகைய போக்கு யாப்பருங்-கலக்காரிகையில் மிகுந்து காணப்படுகின்றது.

> தக்கார் தகவிலர் என்ப தவரவர்
> எச்சத்தால் காணப்படும் (திருக்குறள் 114)

க், ச் என்பன ஒரே எழுத்தல்ல எனவே இப்பாடல் எதுகை அமைந்-ததன்று என்னும் சிறப்பின்மையைத் தவிர்க்கும் பொருட்டு, வல்லின எதுகை இதில் அமைந்துள்ளது. என்னும் அமைதி கூறப்படுகின்றது. இத்தகைய போக்கினைத் தொல்காப்பியத்தில் காணுதல் அரிது.

2. 5 செய்யுள்

யாப்பருங்கலம் (54) செய்யுளைப் பா, இனம் என இருவகைப்-படுத்துகின்றது. மேலும், வெண்பா, அகவல், கலி, வஞ்சி என நான்கு வகையாகப் பாவையும் தாழிசை, துறை, விருத்தம் என மூன்று வகையாக இனத்தையும் (55, 56) பகுத்துக் கூறுகின்றது. தொடர்ந்து நால்வகைப் பாக்களும் அவ்வவற்றின் வகைகளோடு இனங்களும் விளக்கம் பெறுகின்றன. இம்முறை ஒரு சீராக இந்-நூலில் பின்பற்றப்படுகின்றது. ஆனால் காரிகையில் செய்யுளைப்

பா. இனம் என வகைப்படுத்துதல் வெளிப்படையாக இல்லை. இந்நூல் நால்வகைப் பாக்களையும் முறையே கூறும்போது அவற்றின் வகைகளை அடுத்து இனங்கள் மூன்றனையும் விளக்கிச் செல்கின்றது.

ஒவ்வொரு பாவிற்குமுரிய பொது இலக்கணத்தைக் கூறி, அதன் வகைகளும் இனங்களும் விளக்கப்படும் முறை யாப்பருங்கலத்தில் சுருக்கமாகவும் தெளிவாகவும் அமைந்துள்ளது. பாக்களின் பொது இலக்கணத்தைச் சான்றாகக் கூறலாம்.

வெண்பா

1) செப்பல் இசை

2) அந்த அடி சிந்தடி

3) ஈற்றுச் சீர் அசைச்சீர். (57)

அகவல்

1) அகவல் இசை

2) ஈற்று எழுத்து ஏ, ஓ, ஈ, ஆய், என், ஐ (69)

கலி

1) துள்ளல் இசை

2) வெண்பா அல்லது அகவல் போன்று முடியும் (78)

வஞ்சி

1) தூங்கல் இசை

2) தனிச்சொல்லைத் தொடர்ந்து அகவல்போல் முடியும். (90)

காரிகை கூறும் பொது இலக்கணம் வருமாறு :

வெண்பா

1. அளவடி

2. செப்பல் ஒலி (22)

3. ஈற்றடி சிந்தடி

4. ஈற்றுச் சீர் அசைச்சீர், பிறப்பு, காசு (28)

அகவல்

1) அளவடி

2) அகவல் ஒலி (22)

கலி

1) அளவடி

2) துள்ளல் ஒலி (22)

வஞ்சி

1) குறளடியும் சிந்தடியும்

2) தூங்கல் ஒலி (22)

3) தனிச் சொல்லைத் தொடர்ந்து சுரிதகம் வந்து முடியும் (45)

நேரிசை வெண்பா இலக்கணம் கூறுவதில் இரு நூல்களும் சிறிது வேறுபடுகின்றன நான்கடியும் இரண்டாம் அடியின் ஈற்றில் தனிச் சொல்லும் அமையும் என்பது யாப்பருங்கலக் (60) கருத்து. குறட்பா இரண்டு சேர்ந்து அமையும். இரு குறட்பாக்களையும் தனிச் சொல் இணைக்கும் என்பது காரிகைக் (24) கருத்து.

கண்ணவனைக் காண்கவிரு காதவனைக் கேட்கவாய்
பண்ணவனைப் பாட பதஞ்சூழ்க — எண்ணிறைந்த
நெய்யொத்து நின்றானை நீலமிடற் றானையென்
கையொத்து நேர்கூப்பு க. (புறப்பொருள் விளக்கம் 1)

இவ்வெண்பா போன்றவற்றை உரையாசிரியர் ஆசிடை நேரிசை வெண்பா என்பர்.[8] இத்தகையவற்றையும் கருத்திற் கொண்டு யாப்பருங்கலச் செய்தி அமைந்துள்ளது.

சிந்தியல் வெண்பாவைக் கூறும் யாப்பருங்கலம் (59) அதைப் பகுத்துக் கூறவில்லை. ஆனால் இவ்வெண்பா நேரிசை, இன்னிசை எனும் இரு வகை உடைத்து எனக் காரிகை (28) கூறுகிறது.

வெளிவிருத்தம் நான்கடியானும் வரும் என யாப்பருங்கலமும் (68) மூன்றடியானும் வரும் எனக் காரிகையும் (31) கூறி வேறுபடு-

கின்றன. இப்பாவினம் இரு வழிகளிலும் வரும் என்பதை இரு நூல்களும் உடன்படுகின்றன எனக் கொள்ளலாம். எனினும் சிறப்பியல்பாகக் கருதுமிடத்து இரண்டும் தம்முள் வேறுபடுகின்றன.

நிலைமண்டில ஆசிரியப்பாவின் இறுதி எழுத்து மெய்யாக அமையும் என்னும் செய்தி யாப்பருங்கலத்தில் (74) உளது. இத்தகு நுண்விளக்கம் காரிகையில் (33) இல்லை.

வெண்பா அமைப்பு முன்னும், ஆசிரியப்பா அமைப்பு ஈற்றிலுமாகச் சேர்ந்து அமைந்த மருட்பா என்னும் பாவகையினைக் காரிகை (47) விளக்குகின்றது. இது பற்றிய செய்தியோ குறிப்போ யாப்பருங்கலத்தில் காணப்படவில்லை. இரு வேறு பாக்களின் கலப்பாக இருப்பதனால் இந்நூல் இப்பாவைக் குறிப்பிடவில்லை போலும். ஆனால் தொல்காப்பியம் (செய்யுளியல் 81) இதனைக் கூறுகின்றது. காரிகை மீண்டும் பருட்பாவைத் தமிழுலகிற்கு நினைவூட்டுகின்றது எனலாம்.

2.6 ஒழிபுச் செய்தி

செய்யுளில் தனிச்சொல் அமையும் இடம் (94), நிரல்நிறை முதலிய பொருள்கோள், செய்யுள் விகாரம், வகையுளி, அம்மை முதலியன, வண்ணம் பற்றிய சிறுகுறிப்பு (95) ஆகியன யாப்பருங்கல ஒழிபியலில் கூறப்படுகின்றன. மேலும், மாற்று, சக்கரம், சுழிகுளம், ஏகபாதம், எழு கூற்றிருக்கை உள்ளிட்ட சித்திரக்கவிகள், உருவகம் உள்ளிட்ட அணிகள், பாடுதல் மரபு, ஆனந்தம் முதலிய குற்றம், பண், திறம், தந்திரவுத்தி போன்ற செய்யுளோடு தொடர்புடைய பல்வேறு செய்திகளும் (96) கூறப்படுகின்றன. இச்செய்திகள் எல்லாம் பெயர் சுட்டலோடு அமைந்து, விளக்கமின்றி, நல்ல கவிஞன் ஒருவன் இவற்றைத் தெரிந்திருத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தும் வகையில் கூறப்படுகின்றன.

உறுப்பியலிலும் செய்யுளியலிலும் கூறப்படாத செய்திகள் காரிகையின் ஒழிபியலில் (50 - 58) தொகுக்கப் பெற்றுள்ளன எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, செய்யுள், ஓசை (வண்ணம்) என்னும் எல்லா நிலைகளையும் இவ்வியல் அடக்கியுள்ளது. இச்செய்திகள் யாப்பருங்கலத்தில் உறுப்பியலிலும் செய்யுளியலிலும் உரிய இடங்களில் முறையாகவும் நிரலாகவும் கூறப்பட்டவையாகும்.

யாப்பருங்கலம் அகவல் யாப்பில் செய்திகளை கூறுவதனால் உரிய-இடங்களில் நிரலாகக் கூற முடிந்தது. ஆனால் காரிகையோ கட்டளைக் கலித் துறையில் கூறுவதனால் செய்திகளை நிரலாகத் தருவதில் ஒழுங்கின்மை காணப்படுகின்றது. நடையில் எளிமை, தெளிவு போன்றவற்றில் காரிகை பின் தங்கிநிற்பதற்கும் இது ஒரு காரணம் எனலாம். மேலும், காரிகை ஆசிரியரின் திட்டமிட்டுச் செய்திகளைக் கோக்கும் திறனில் உள்ள குறைபாடும் இதற்குக் காரணம் என்பதையும் மறைத்தல் இயலாது

மாலை மாற்று முதலாகக் கூறப்பட்டுள்ள யாப்பருங்கலச் செய்திகள் அணி நூல்களிலும் பாட்டியல் நூல்களிலும் விளக்கப்-படுகின்றன.

3. விளக்கமுறை

3.1 நடை

இரு நூல்களும் வெவ்வேறு நடையினைக் கொண்டுள்ளன. யாப்பருங்கலம் அகவல் யாப்பில் செய்திகளை விளக்கமாகத் தரு-கின்றது. செய்திகள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் கூறப்-படுகின்றன. யாப்பருங்கலக் காரிகையின் யாப்புக் கட்டுப்பாடு மிகுந்த-வற்றுள் ஒன்றான கட்டளைக் கலித்துறையால் அமைந்தது. நடை யாப்பருங்கலத்தைவிடக் கடினமானது.

இலக்கணம் கூறும் போது பொது இலக்கணத்தைக் கூறி பின்னர் வகைகளை விளக்கும் முறை யாப்பருங்கலத்தில் ஒழுங்காக-வும் தெளிவாகவும் இடம்பெற்றுள்ளது. செய்திகள் ஆங்காங்கே சிதறலாக அன்றி, உரிய இடத்தில் தொகுத்து விளக்கப்படுகின்றன. இம்முறை காரிகையில் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றது. இந்நூலின் ஒழிபியல் செய்திகள் இதற்குச் சான்றாகும். இக்குறை பிற இயல்-களிலும் உள்ளன.

செய்திகளை வெளிப்படையாகக் கூறும் முறை யாப்பருங்-கலத்திலும் குறிப்பாக உணர்த்தும் முறை காரிகையிலும் பெரிதும் இடம்பெற்றுள்ளன. சான்றாக ஐகாரத்தை அசையில் அமைப்பதைச் சுட்டலாம்.

ஈறும் இடையும் இணைந்தும் இணையசை
ஆகுமை என்ப அறிந்திசி னோரே (யாப்பருங்கலம் 9)
.. ஐ காரநைவேல்
ஒருங் குறிலியல்.. (காரிகை 50)

3.2 செய்தி பேணல்

செய்திகளை வரையறுத்து எண்ணிடும் முறை யாப்பருங்கலத்தில் ஒரு சீராக உரிய இடத்தில் பின்பற்றப்படுகிறது இதனால் செய்திகளில் பிற்காலத்தோர் இடைச் செருகுதல் இயலாது. இது செய்தி பேணும் முறையாகும் ஆனால் காரிகையின் நூலின் நூற்பாக்களைப் பேணும் முறையும் உளது. எனவே நூற்பாக்களை விடவோ சேர்க்கவோ இயலாது. ஒவ்வொரு இயலின் இறுதியிலும் அந்தந்த இயலில் இடம் பெற்ற காரிகையின் முதல் சொல் அனைத்தையும் கொண்ட காரிகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும் செய்திகளை வரையறுத்து எண்ணிடும் முறை ஒழிபியலின் இறுதியில் ஒரு காரிகையில் தொகுப்பாக இடம்பெற்றுள்ளது.

...ஐம்மு வெழுத்தும் ஆமசைக் குறுப்பே (யாப்பருங்கலம் 2)
...இரண் டாகி அடங்குமன் அசையே (யாப்பருங்கலம் 5)

எழுத்துப் பதின்மூன் றிரண்டசை
சீர்முப்ப தேழ்தளையைந்
திழுக்கில் அடிதொடை நாற்பதின்
மூன்றைந்து பாவினமூன்
றொழுக்கிய வண்ணங்கள் நூறொன்ப
தொண்பொருள் கோளிருமூ
வழுக்கில் விகாரம் வனப்பெட்
டியாப்புள் வகுத்தனவே (காரிகை 59)

சீரோடு விட்டிசை மாஞ்சீர்
இயற்றளை சேர்ந்தருகி
வாரடர் கொங்கை வருக்கம்
சுருங்கிற்று வான்பொருளும்
சீரிய தூங்கேந் தடுக்குச்
சிறந்த எழுத்துமன்றே
ஆரும் ஒழிபியற் பாட்டின்
முதல்நினைப் பாகுமன்றே (காரிகை 60)

காரிகையின் இம்முறை நூற்பாக்களை நினைவில் நிற்குமாறு பேணப்பட்டுள்ளது.

மகடூஉ முன்னிலையாக்கிச் செய்திகளைக் கூறுதல் கற்போரை நயமாக ஈர்க்கும் நோக்கில் காரிகையில் புகுத்தப்பட்டுள்ளது. எனினும் நடை, விளக்குமுறை போல்வன கடினமாக இருப்பதனால் யாப்பருங்கலமே கருத்தை ஈர்க்கின்றது.[9]

3. 3 நினைவூட்டல்

கூறப்படுகின்ற செய்திகளுக்கு உரிய சான்றுகளைக் காட்டும் வகையில் காரிகை பாடல்களின் தொடக்கச் சொற்களைக் கொண்ட காரிகைகளை அமைத்துள்ளது. இத்தகைய முறை யாப்பருங்கலத்தில் இல்லாததாகும்.

> கன்று குணில்வானுறத்தா
> ழிசையாம் கரைபொருகான்
> என்றது... (காரிகை 36)

இம்முறை தமிழிலக்கியங்களை நன்கு கற்றுத்துறை போய அறிஞர்க்கே அன்றி, யாப்புப்பயிலும் மாணவர்க்குப் பயன் தராது (தேர்வில் மனனம் செய்து எழுதும் மாணவர்க்குச் சான்றுப் பாடல்களை மனத்தில் நிறுத்தப் பயன் படலாம்)

இரு நூல்களும் செய்யுளின் புறவடிவத்தை மட்டுமே செய்யுள் எனக் கொண்டு இலக்கணம் கூறுகின்றன. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, ஓசை ஆகியவற்றை மட்டும் செய்யுள் உறுப்பாக இவை கருதுகின்றமையால் இதனை உணரலாம். ஆனால் தொல்காப்பியக் கோட்பாடு வேறானது அது புறவடிவத்தோடு அகவடிவத்தையும் ஒத்த நிலையுடைய செய்யுள் உறுப்புகளாகக் கருதுகின்றது இதனை மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்று வகை, கேட்போர் களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு வண்ணம், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பவற்றை 'நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென வல்லிதின் கூறி வகுத்துரைத் தனரே' என்று தொல்காப்பியம் (செய்யுளில் 1) கூறுவதனால் அறியலாம்.

3 4. மரபு

யாப்பருங்கலமும் காரிகையும் மரபைப்பின்பற்றி இலக்கணம் கூறுகின்றன. என்ப அறிந்திசினோர் (9), என்ப இயல்புணர்ந்தோர் (11), மொழிப இயல்புணர்ந்தோர், (17), கட்டுரைத்தனர் (23), நிறுத்தனர் (24), வகுத்தனர் (25), என்மனார் புலவர் (26), வரையார் (31, 37) மொழிப (32), மொழிமனார் புலவர் (35)' கூறுப ஒரு சாரார் (39), என்மனார் குறி உணர்ந்தோர் (45), ஓதினர் மாதோ உணர்ந்திசினோர் (52), மொழிந்திசின் (53), பண்பறி புலவர் பகுத்துரைத் தனர் (81), மொழிப துணிந்தி சினோர் (91), என்மனார் புலவர் (92), என்ப (94), என்று யாப்பெருங்கலமும் அறிஞர் உரைத்த அளவு (4), வேண்டுவர் (2), வல்லோர் வகுத்த (10), என்ப (19), நாவலர் ஓதினர் (23), துணிந்தனர் (34), மருட்பா என்னும் வையகம் (47), என்ப பாவலர் (49), மொழிவர் (54) என்று யாப்பருங்கலக் காரிகையும் மரபு பேணுதலை வெளிப்படுத்துகின்றன. மேலும், இக்கருத்திற்கு அரணாகக் காரிகையின் அவையடக்கப் பாடலையும் கூறலாம்.

தேனார் கமழ்தொங்கல் மீனவன்
கேட்பத்தெண் ணீரருவிக்
கானார் மலயத் தருந்தவன்
சொன்னகன் னித்தமிழ்நூல்
யானா நடாத்துகின் றேனென்
றெனக்கே நகைதருமால்
.... (காரிகை 2)

யாப்பருங்கலக் காரிகை தான் யாப்பருங்கலத்தின் வழிநூல் என்று ஓரிடத்தும் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. எனினும் பெயரமைப்பு யாப்பருங்கலத்தின் வழிநூலே காரிகை என்று உணர்த்துகின்றது வழிநூல்கள் தம் முதனூலை வெளிப்படையாகக் கூறும் இயல்பு பொதுவாகத் தமிழுலகில் காணப்படுவதில்லை.

4 முடிவுரை

யாப்பருங்கலத்தின் வழி நூல் யாப்பருங்கலக் காரிகையாகும் இவ்விரு நூல்களும் கூறும் செய்திகள் பெரிதும் ஒத்துள்ளன. வழி நூலின் நடையை விடவும் முதல் நூலின் நடையே எளிமையும் நுண்மையும் விளங்க வைக்கும் தன்மையும் உடையதாக உள்ளது.

மிகச் சில செய்திகளில் இரு நூல்களும் வேறுபட்ட கருத்-தினைக் கொண்டுள்ளன. இரண்டுமே தமிழ் மொழியின் எழுத்து, சொல், பொருள் உள்ளிட்ட இலக்கணங்களை நன்கு அறிந்தவருக்கே எளிதில் பயன்படும் வகையில் உள்ளன.

பெரிதும் ஒத்துள்ள செய்திகளை ஒரே ஆசிரியர் இரு நூல்-களில் கூற வேண்டியது இல்லை. எளிமையாகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் ஏற்கெனவே ஒரு நூலை எழுதியவர், கடினமாகவும் விளக்கம் குறைவாகவும் அமைந்த பிறிதொரு நூலை ஒரே செய்தியைக் கூற எழுத வேண்டியது இல்லை. எனவே யாப்பருங்கலமும் யாப்பருங் கலக் காரிகையும் ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்டவை அல்ல. இவை வெவ்வேறு ஆசிரியர்களால் இயற்றப்பட்ட நூல்களாகும்.

யாப்பருங்கலத்தின் ஆசிரியர் பற்றிய குறிப்பு வெளிப்படையாக நூலில் இல்லை. இதன் பாயிரத்தில் வரும் 'அளப்பருங் கடற்பெயர் அருந்தவத் தோனே' என்னும் குறிப்பைக் கொண்டு அமுதசாகர-னாரே இதன் ஆசிரியர் என்றும் இவரே காரிகையினையும் செய்தவர் என்றும் உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்! பாயிரச் செய்தியி லுள்ள கடற் பெயர் என்பது அமுதசாகரன் எனப் பொருள்படும் என்று கூறுவது உறுதியன்று மேலும். இப்பாயிரம் நூலாசிரியரே செய்தது என்றும் கூறுதல் இயலாது. இவ்வாறே யாப்பருங்கலக் காரிகையின் ஆசிரியர் பற்றிய கூற்றும் நூலில் இடம் பெறவில்லை. இரு நூல்களின் ஆசிரியர்கள் பெயர் அமுதசாகரன் என்பதே எனக் கொண்டாலும், இருவரும் ஒரே பெயரைக் கொண்ட வெவ்வேறு புலவர்களே என்பது இவ்விரு நூல்களும் தரும் செய்திகளால் புலப்-படுகின்றது.

அடிக்குறிப்புகள்

1. காக்கைப் பாடினியார், அவிநயனார், மயேச்சுரர் போன்ற பல புலவர்கள் பாடிய யாப்புப் பற்றிய நூற்பாக்கள் சில யாப்பருங்கல விருத்தி உரைகாரரால் மேற்கோள் காட்டப்-பட்டுள்ளன. இப்புலவர்களின் நூல்கள் இன்று கிடைக்கப்-பெற்றில.

௨. இவற்றில் கடவுள் வாழ்த்தும் பாயிரமும் அடங்கா.

3 தொல்காப்பியம் (நூன்மரபு 1, 2)

4. தொல்காப்பியம் (செய்யுளியல் 1) இவற்றை மாத்திரை, எழுத்தியல் எனச் சுட்டுகின்றது.

5 ஐகாரம் அகரமாகச் செயற்படுதலை இலக்கண நூல்கள் இரண்டாம் வேற்றுமையையும் விளி வேற்றுமையையும் விளக்குமிடத்துக் கூறுகின்றது

காவலோனை > காவலோன அன்னை > அன்னாய்

6. ‘இயலசை மயக்கம் இயற்சீர்’ என்பது போன்ற தெளிவான விளக்கத்தினைத் தொல்காப்பியத்தில் (செய்யுளியல் 11 – 19) காணலாம்.

7. தொல்காப்பியம் (செய்யுளியல் 84, 85) மோனை எதுகை, முரண், இயைபு, அளபெடை எனும் ஐந்தனையுமே ஒத்த சிறப்புடையனவாகக் கருதுகின்றது. வீரமாமுனிவர் செந்தமிழ் இலக்கணம் என்னும் நூலில் (பக். 121-128) மோனை, எதுகை, இயைபு என்னும் மூன்றனை மட்டும் இன்றியமையாதன எனக் கூறி, விளக்குகின்றார். செய்யுளில் ஓசை ஒத்திசைவு, ஏற்படுத்துவதில் இம்மூன்றுமே இன்றியமையாதவை.

8. இப்பாவினைக் காரிகை உதாரண முதற்குறிப்புக் காரிகையில் (25) ஆசிட்ட நேரிசை எனக் குறிப்பிடுகிறது. ஆனால் விளக்கவில்லை.

9 காரிகை கற்றுக் கவிபாடு வதினும்
பேரிகை கொட்டிப் பிழைப்பது மேல்—எனும் முதுமொழி நினைத்தற்குரியது.

10. யாப்பருங்கல விருத்தியுரை (15), பெருந்தேவனார் உரை (வீரசோழியம், அலங்காரப் படலம் 39).

துணை நூல்கள்

1. யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, கழகவெளியீடு, சென்னை, 1953.
2. வீரசோழியம், கழக வெளியீடு, 1973.
3 தொல்காப்பியம், நியுசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 1957.
4. நன்னூல், கழக வெளியீடு,
5. வீரமாமுனிவர், செந்தமிழ், சரஸ்வதி மஹால், தஞ்சாவூர்

சேதுபதிகள் பற்றி பாரதப் பிரதமரின் பாராட்டுகள்

ராமேசுவரத்தையும் மண்டபத்தையும் இணைக்கும் இரண்டரைக் கிலோ மீட்டர் நீளமுள்ள நெடும் பாலத்தினைச் சென்ற அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினார். ராமநாதபுரம் சேதுபதி மன்னர்களின் பரம்பரையைச் சார்ந்த ராணி இந்திராதேவி அம்மையார் பிரதமரைச் சந்தித்து பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள். பிரதமரின் துணைவியாருக்கும் ஒரு பட்டுச் சேலையைப் பரிசாக அளித்தார்கள்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நிகழ்ச்சியில் சேதுபதிகளின் தமிழ்த் தொண்டு, நாட்டுப்பற்று, இறையுணர்வு ஆகியவற்றினை பிரதமர் நினைவு கூர்ந்து பாராட்டி ராமநாதபுரம் — ராமேசுவரம் நெடுஞ்சாலைக்கு சேதுபதி நெடுஞ்சாலை என்று பெயர் சூட்டினார். அவரது சொற்பொழிவின் ஒரு பகுதி கீழ்வருமாறு.

"முன்னொரு காலத்தில் படையெடுத்து வந்த போர்ச்சுகீசியர்களை, பாலம் கட்டப்பட்டுள்ள இந்த இடத்தில் மறவர் குலத் தலைவர் ரகுநாத சேதுபதியின் படைகள் தடுத்து நிறுத்தின. எனவே இந்தத்தீவு சேதுபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. அத்தகைய சேதுபதிகள் ராமேசுவரம் கோயிலுக்கும் அளவற்ற சேவைகளைச் செய்துள்ளனர். இந்தக் கோயில் 5 ஆயிர ஆண்டுகால பாரம்பரியமான இடம். சுவாமி விவேகாநந்தரை அமெரிக்காவிற்கு உலக மதங்களின் மாநாட்டுக்கு அனுப்பி வைத்த பெருமை பாஸ்கர சேதுபதியைச் சாரும். சிகாகோவிலிருந்து திரும்பிய விவேகாநந்தர் பாஸ்கர சேதுபதியைப் பாராட்டி அவர் கூறியதைத்தான் நான் அங்கு பேசினேன் என்றார். மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை அமைக்க சேதுபதி எடுத்துக் கொண்ட முன் முயற்சிகள் பாராட்டத்தக்கன. நாம் விடுதலை பெறுதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பே பாஸ்கர சேதுபதி இங்கு ஒரு அடிக்கல் நாட்டினார். அதில் சத்யமேவ ஜயதே (அறம் வெல்லும்) என்றும் பொறித்தார்."

கடந்த தொண்ணூறு ஆண்டுகளாக வெளியிடப்படும் செந்தமிழ் பற்றியும் பிரதமர் குறிப்பிட்டுப் பேசினார். 1500 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட தமிழ்ச் சங்கங்களின் தொடர்ச்சியாக நான்காவது தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்தவர் பாண்டித்துரைத்தேவர். இன்று காறும் வெளியிடப்பெற்று வருகின்ற செந்தமிழ் எனும் இலக்கிய இதழ் அவரால் தான் உருவாக்கப்பட்டது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு இந்தியப் பிரதமரின் புகழாரம்

அண்மையில் பசும்பொன் கிராமத்தில் உள்ள தேவரின் நினைவாலயத்திற்குச் சென்று பேசியதாவது :

தேசத்திற்குப் பாடுபட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நினைவாலயத்திற்கு நான் வரும் வாய்ப்பு கிடைத்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். வீரமும் விவேகமும் கொண்ட முத்துராமலிங்கத் தேவரின் வாழ்க்கையை இளைஞர்கள் பின்பற்றி நாட்டிற்குத் தொண்டு புரிய முன்வர வேண்டும் என்றும் கூறினார்.

கீதாஞ்சலி — 6

சிறுமலர் ஒன்று பறித்திடுக ; காலம்
குறுநகை புரியுது வருகதேவே ! — தாமதம்
உருவும் நலனும் உருக்குலைக்க, மண்
புரளுமோ ; பூமனம் நடுங்குறுமே !

புத்தம் காலைப் பூமாலை — தனில்
சுற்றும் கேளேன் ஒரிடமும் ; எனின்
தொட்டுப் பறித்தால் போதுமையே — வேதனை
விட்டுத் தெறிக்கும் ; நாள்போமே !

போற்றும் வண்ணம் பெற்றிலது ; நெடுநல்
நாற்றம் நல்கவோ நோற்றிலது — எனின்
ஏற்றுக் கொள்வாய் இம்மலரை ; காலம்
ஏற்றிச் செலுமுன் பெம்மானே !

— அமரன்

நூல் மதிப்புரை

நூற்பெயர் — திருவரங்க ராஜகோபுரம்
ஆசிரியர் : ப சுப்பிரமணியன்,
எம் ஏ , எம் பில்.,
25, பெரியார் நகர், திருச்சி-5
நூலின் விலை—ரூபா 15/-

விண்ணை முட்டும் கோபுரங்களை மாமன்னர்கள் கட்டிய காலமெல்லாம் போய்விட்டது. மன்னர்களும் போய்விட்டனர் இன்றைய மக்களாட்சிக் காலத்தில் ஒரு மாமுனிவர் முன்வந்து அறப்பணியும் ஆன்மீகப் பணியும் இணைந்த ஆலயப்பணியை நடத்தியது ஒரு அற்புதம். அதன் வரலாற்றினை இந்நூல் திறம்பட விளக்குகிறது. ஆரவாரத்துக்கேயுரிய அரசியல் செய்யாததை ஆன்மீகம் அழகுறச் செய்ய முடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

ஏறத்தாழ ஒன்றரைக் கோடி ரூபாய் — எட்டு ஆண்டுகள் — நூற்றுக் கணக்கான பணியாட்கள் — அயராத உழைப்பு — இவையெல்லாவற்றையும் விட இத்திருப்பணித் தொகையை நெறிமுறை வழாது செலவிட்டு மொட்டைக் கோபுரத்தை முழுக் கோபுரமாக்கிய அகோபிலப் ஜீயர் அழகிய சிங்கர் அவர்களின் அருள் உள்ளம் ஆகிய அனைத்தும் இந்நூலுள் கண்டு தெளிகிறோம்.

திருவரங்கம் ஒரு தீவாய் அமைந்த திருத்தலம் அதன் வரலாறு சங்க காலந் தொட்டு இந்நாள் வரை நீண்டு நிற்கும் நேரிது. அதனைப் பல்லாற்றானும் ஆய்வதே இந்நூலின் முதற்கட்டுரை. ஆசிரியரின் இலக்கியப் புலமை தெள்ளிதின் விளங்குகிறது. கோயில் அமைப்பும், வரலாறும், வரன் முறையாகச் செய்திகளைச் சொல்லுகின்றன. சிற்ப வேலைப்பாடுகளைச் சொல்லும் நான்கைந்து பக்கங்களில் வரும் கலைச் சொற்கள் புதியன; புரியாதன அவை போன்ற நுண்கலைக்கேயுரிய கலைச் சொல் அகராதி வளரும் தமிழுக்குச் செய்ய வேண்டிய அரும்பணிகளுள் ஒன்று என்பதையே அவை நினைவுபடுத்துகின்றன. கோபுரங்கண்ட மாமுனிவரின் வரலாறு சிறப்புடைத்து. தெலுங்கு தேயத்தில் துறவு பூண்டாலும், தாம் அவதரித்த அருந்தமிழ்ப் பெருநாட்டில் அரங்கனின் தலத்தில் திருப்பணி செய்த அழகிய சிங்கர் மனம் மொழி மெய்களால் வணங்கத்தக்கவர். சிற்பக் கலைஞர் சிவப்பிரகாசம் அவர்களையும் நூலுள் இணைத்து வரலாற்றுப் பெருமைக்கு ஆட்பட வைத்துள்ள நூலாசிரியர் பாராட்டுக்குரியவர். இத்திருப்பணியை சமயப்பணி, கலைப்பணி, சமூகப்பணி என்று பிரித்துக்காட்டுந் திறன் அழகிது. குடமுழுக்கு நிகழ்ச்சிக்கு நேரில் செல்லாத குறையினை இந்நூல் நீக்கிவிடுகிறது. சிறந்த பல நூல்களை மேலும் இவர் படைக்குமாறு அரங்கன் திருவருள் முன்னிற்க வேண்டும்.

இலக்கியச் செலவு

இந்திய மண்ணில் பிறந்து, ஆங்கில மொழியில் இலக்கியம் படைத்து அமெரிக்க நாட்டில் பரிசும் பாராட்டும் பெற்றோருள் நாவலாசிரியர்களாகிய ஆர் கே. நாராயண், ராஜாராவ் போன்றோரைக் குறிப்பிடலாம். இவருள் ராஜாராவ் தமது ஐம்பத்தி ஆறாவது வயதில் அமெரிக்காவிற்குச் சென்றார். கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளாக அங்கேயே தங்கி பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிவதோடு தத்துவக் கருத்துக்களை அடியொற்றிய தமது நாவல்களையும் வெளியிட்டுக் கொண்டுள்ளார்.

படைப்பு இலக்கியத்தைப் போலன்றி வரலாற்று நூல்கள் ஆராய்ச்சி நூல்கள் எழுதுவதற்கு மிக்க பொறுமையும் ஆர்வமும் வேண்டும் பரந்து பட்ட நூலறிவு, சுவைபட எழுதும் திறமை ஆகியனவும் இன்றியமையாத இயல்புகளாகும். இராமாயண மகாபாரதக் காதைகளை ஆங்கிலத்தில் இருவரிப் பாடல்களாகவே எழுதிக் குவித்தவர் வங்கம் தந்த ரொமேஷ் சந்திரதத். இவர் படித்த பாடமோ பொருளாதாரம். எழுதியதோ அழகான ஆங்கிலக் கவிதைகள் ஆங்கிலேயரும் போற்றும் வண்ணம் அம்மொழியில் இந்திய வரலாற்று நூல் எழுதியவர் சத்தியநாத அய்யர். இலக்கியத் திறனாய்வில், அதுவும் மில்டனைப் பற்றி மேலை நாட்டினரும் மெச்சும் வகையில் ஆங்கிலத்தில் அரிய விளக்கம் கொடுத்தவர் டாக்டர் ராஜன் இந்தியரேயாயினும் இப்படி ஆங்கிலத்திலும் மேன்மைதரு இலக்கியம் படைத்தோர் பற்றியச் செய்திகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். இருப்பினும் வளர்ந்து வரும் பற்பல துறைகளுக்கேற்ப ஆங்கில நூல்கள் நம் நாட்டவரால் எழுதப்படுவதில்லை.

மொழிபெயர்ப்புக் கலை அண்மைக் காலந்தொட்டு அதிகமாகவே வற்புறுத்தப்படுகிறது அதிலும் பல்வேறு மொழிகள் பேசப்படும் இந்திய நாட்டில் உணர்ச்சி பூர்வமான, அறிவார்ந்த ஒருமை உணர்வு ஏற்பட வேண்டுமாயின், பல்வேறு மொழிகளின் சிறந்த இலக்கியங்களை மொழி பெயர்த்து வெளியிட வேண்டும். அந்தப் பணியும் சாகித்ய அகாடெமியோடு தனிப்பட்டோரின் முயற்சியிலும் நடைபெற்று வருகிறது. இருப்பினும் மொழி பெயர்ப்பு பற்றிய ஆங்கில நூல் இந்திய அனுபவத்துக்கு ஏற்புடைத்தாக இது-

வரை இந்தியர் எவராலும் எழுதப்படவில்லை என்பது வியத்தகு உண்மையாம். இந்தியாவில் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் இருந்தும், இத்தகு நூலை எழுத எந்தப் பேராசிரியரும், முன் வந்ததாகத் தெரியவில்லை. மொழி பெயர்ப்பு பற்றி நூல்கங்களில் கிடைக்கும் அனைத்தும் தியோடர் சேவரி, யூஜின் நீடா, சூசன் பாஸ்னட், கேட்போர்டு போன்ற ஐரோப்பியர்கள் எழுதியவை. அவர்கள் கொடுக்கும் சான்றுகளும் ஐரோப்பிய மொழிகளிலிருந்து காட்டப்படுபவையே. எனவே மொழி பெயர்ப்பு பற்றிய சிறிய நூலாயினும் இந்திய நிலைக்கேற்ப எழுதும் முயற்சியில் ஈடுபடுவோம். என்றெண்ணி கல்கத்தா பயணத்தை மேற்கொண்டேன். பத்து நாட்கள் அங்கு தங்கினேன்.

கல்கத்தா — ஏஷியாடிக் சொசைட்டி

வெள்ளைய இனம் வணிகங் கருதி வந்து காலடி வைத்த இடங்களுள் கல்கத்தாவும் ஒன்று இன்றைய நிலையில் அந்த நகரம் மக்கட் தொகையில் ஒரு கோடியினைத் தாண்டிவிட்டது அது ஒரு நகரம் என்பதைவிட ஒரு வகையில் பூலோகத்து நரகம் என்றே சொல்லி விடலாம். அழுக்கும், நெரிசலும், நாற்றமும் நிறைந்த அந்நகரில் சுத்தமான காற்றும், நீரும் தேடிப் பிடிக்க வேண்டும் நீரிலும், நிலத்திலும், பூமிக்கடியிலும் பயணம் செய்ய முடியும் என்றாலும், மனித வெள்ளத்தின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறிக் கொண்டிருக்கிற நகரம் அது இருப்பினும் வரலாற்றுச் சின்னங்களாக உள்ள விக்டோரியா நினைவரங்கம், போர்ட் வில்லியம், ஏஷியாடிக் சொசைட்டி போன்றவை பழமையினை நினைக்குக் கொண்டு வருவனவாகும்.

இவற்றுள் ஏஷியாட்டிக் சொசைட்டி எனும் ஆய்வுக் கழகமும் நூலகமும் இருநூறு ஆண்டுகளுக்கு முன் (1784) தொடங்கப்பட்டவை. இவற்றைத் தொடங்கிய வில்லியம் ஜோன்ஸ் (1746—1794) அந்தக் காலத்தில் கல்கத்தாவில் இருந்த சுப்ரீம் கோர்ட்டுக்கு நீதிபதியாக வந்தவர். ஏறத்தாழ இதே காலத்தில் தான் மெக்காலே என்பாரும் இந்தியாவிற்கு வந்தவர் இந்திய மொழி இலக்கியங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் அவை வெறும் புராணக்குப்பைகள் என்றவர் மெக்காலே. ஜோன்ஸ் அதற்கு நேர்மாறானவர். இருவருமே நிறைய ஊதியம் பெற்று அதனை மிச்சப்படுத்தி இங்கிலாந்துக்குக் கொண்டு சென்றவர்கள்—அந்த நோக்கத்தோடு

தான் வந்தவர்கள் இப்போதே இந்தியர்கள் வெளிநாடு சென்று செல்வம் சேர்த்துவர எண்ணும் தலைகீழான பரிதாப நிலைமை.

மேற்கூறப்பட்ட இருவருள்ளும் ஜோன்ஸ் இந்தியாவின் பழம் பெரும் இலக்கியச் செல்வங்களை ஐரோப்பிய நாட்டுக்கு அறிமுகப் படுத்துவதற்கென்றே இந்த சொசைட்டியைத் தொடங்கினார். காளிதாசரின் சாகுந்தலத்தை முதன் முதலாக (The Fatal Ring) ஆங்கிலத்தில் பெயர்த்தவர் இவரே. கீதகோவிந்தம், ராமாயணம், மகாபாரதம், வேதங்கள் போன்றவற்றின் ஆங்கிலப் பெயர்ப்புக்குக் காரணமாக இருந்த கோல்புருக், மோனியர், சார்லஸ்வில்கின்ஸ், எட்வின் ஆர்னால்டு போன்றோர் இந்த சொசைட்டியில் பணி புரிந்தோரோவர். இவருள் வில்கின்ஸ் 1785—இல் முதன் முதலாக கீதையை ஆங்கிலத்தில் பெயர்த்தவர். இன்று வரை கீதைக்கு மட்டும் இருபது ஆங்கிலப் பெயர்ப்புகள உள்ளன.

ஏஷியாடிக் சொசைட்டி நூலகத்தில் சமஸ்கிருத, அராபிய பர்சிய, உருது, சீன, வங்காள, ராஜஸ்தான, ஹிந்தி, ஆங்கில மொழிகளில் மிகப் பழைய நூல்கள் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. இந்த நூலகத்தில் குறிப்பெடுக்கும்போது யான் அறிந்த வியத்தகு உண்மைகள் சிலவற்றை எழுதியாக வேண்டும். 1862-ஆம் ஆண்டில் ஆக்ஸ்பர்டு பல்கலைக்கழகச் சொற்பொழிவில் மோனியர் வில்லியம்ஸ் இராமாயண மகாபாரதங்களை கிரேக்க மாகாவியங்களான இலியட், ஆடிஸி ஆகியவற்றோடு ஒப்புமைப்படுத்திக் காட்டுகிறார். "ஹோமர் காட்டும் கிரேக்க நாகரிகத்தினும், இதிகாசங்கள் வெளிப்படுத்தும் இந்திய நாகரிகம் மிக உயர்ந்தது" என்று பாராட்டுகிறார். ராமாயணத்தை முதன்முதலாகப் பிரெஞ்சு மொழியில் பெயர்த்த ஹிப்பாலிட்டே பவுச் என்பார் இன்னும் ஒருபடி மேலே சென்று ஹோமரின் சிந்தனைக்கும் ராமாயணமே ஆதாரம் என்கிறார்.

வடமொழியின் இதோபதேசக் கதைகள் கி. பி. ஆறாம் நூற்றாண்டிலேயே பர்சிய மொழியிலும், ஒன்பதாம் நூற்றாண்டில் அராபியத்திலும், அதற்குப் பின்னரே கிரேக்க எபிரேய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றை ஆங்கிலத்தில் கொணர்ந்த எட்வின் ஆர்னால்டு இவை தான் ஏசாப் கதைகளுக்கும் ஆதாரம் என்று குறிப்பிடுகிறார்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் சென்னைப் பிரிவில் அதிகாரி-யாகப் பணியாற்றிய கிண்டர்ஸ்லி என்பார் திருக்குறளில் தமக்குப் பிடித்தமான பகுதிகளை ஆங்கில உரைநடையாகப் பெயர்த்-துள்ளார். Specimens of Hindoo Literature என்ற தலைப்பில் அந்த நூலை 1794-ஆம் ஆண்டு லண்டனில் வெளியிட்டுள்ளார். முழுதும் இல்லையாயினும் திருக்குறளின் மிகப்பழைமையான ஆங்கிலப் பெயர்ப்பு இதுவே எனலாம். இதுபோன்ற பல்வேறு இலக்கியச் செய்திகளை அறிந்து கொண்ட மகிழ்ச்சியோடு பயணத்தை டில்லிக்குத் திருப்பினேன். அக்டோபர் 8-ஆம் நாள் மதியம் 2 மணிக்கு சியால்டா ரயிலடியில் புறப்பாடு. டில்லிக்கு ஏறத்தாழ 30 மணிநேரப் பயணம். நிலக்கரிப் பகுதிகளான தன்பாத், அசன்சால், துர்க்காபூர் வழியாகப் பீகார் மாநிலத்தின் குறுக்கே செல்லும்போது பாட்னா பின்னர் அலகாபாத், அலிகார் நகரங்கள் வருகின்றன

டில்லியில் அமெரிக்க நூலகம்

முற்றும் குளிர் சாதனம் பொருத்தப்பட்ட இந்த நூலகத்தில் எந்தக் குறிப்பினையும் ஒளிப்படவசதி (xerox) மூலம் உடனடியாகக் கட்டணம் ஏதுமின்றி பிரதியெடுத்துக் கொடுக்கிறார்கள். நூல்கள் மட்டுமன்றி, நூற்றுக்கணக்கான வார மாத இதழ்களும் நமது பார்வைக்குக் கிடைக்கின்றன. யாதாயினும் ஒரு தலைப்பில் குறிப்பு-களோ, செய்திகளோ வேண்டுமாயின் அத்தலைப்பின்கீழ், எந்தெந்த வார மாத இதழ்களில் கட்டுரைகள் வந்துள்ளன என்று அறிந்து கொள்ளவும், அந்த இதழ்களை உடனடியாக நமக்குக் கொடுக்கவும், விரும்பினால் அக்கட்டுரைகளையே அழகிய முறையில் நகல் எடுத்துக் கொடுக்கவும் வசதிகள் உள்ளன. நம்நாட்டில் பிற எல்லா நூலகங்-களிலும் இத்தகைய அரும்பணி கிடைக்கப்பெறின், வாசகருக்குப் பெரிதும் பயன் விளையும்.

பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவில் (India International Center) லோதி எஸ்டேட்டில் இயங்கும் பிறிதோர் நூலகத்துக்கும் சென்றி-ருந்தேன். இந்தியா பற்றி கிழக்கிந்தியக் கம்பெனியாரின் காலத்-திருந்து சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நூல்கள் இங்கு கிடைக்-கின்றன. நூல்களையும், உலகின் பல பகுதிகளிலிருந்து வரும் நாள், திங்கள் இதழ்களையும் பேணி வைத்திருக்கின்ற பாங்கும், அங்குள்ள அமைதியும் அங்கு செல்வோரை அமர்ந்து படிக்கத் தூண்டும் தன்மையன. இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு நமது மத்திய அன்ரசி

கீழ் ஜன்பாத்தில் இருக்கும் தேசிய ஆவணக்கூடம் (National Archives) சென்றால், ஏதோ இருட்டறைக்குள்ளும், குகைக்குள்ளும் போகிற உணர்வு. நான்கைந்து தினங்கள் டில்லியில் தங்கி நூலகங்களில் குறிப்பெடுக்கும் பணியினை முடித்த பின்னர், காஷ்மீர் மாநிலத்தில் ஜம்முவில் அக்டோபர் 15, 16 தேதிகளில் அகில இந்திய நூலாசிரியர் பெருமன்றத்தின் ஆதரவில் நிகழ இருந்த நாமக்கல் கவிஞர் விழாவில் கலந்து கொள்ளச் சென்றேன். அண்மையில் பெய்த பெருமழையினால், ரயில் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்து. எனவே டில்லியிலிருந்து ஜம்முவரை ஏறத்தாழ ஐந்நூறு கிலோ மீட்டர் தூரமும் பேருந்து பயணமாகி விட்டது. பஞ்சாப் மாநிலத்தின் வளமான பகுதிகளை ஊடுருவிச் செல்லும்போது நமக்கு ஒரு உண்மை தெரிகிறது. பஞ்சாப் மாநிலத்தின் கோதுமையும் காய்கறியும், பழங்களும் பாலும் இல்லையானால், டில்லி மாநகரம் பட்டினி தான். இரவில் பேருந்துப் பயணத்தில் நூற்றுக்கணக்கான லாரிகள் நமக்குத் தெரிவிக்கின்ற உண்மை இதுதான். ஜம்முவை நெருங்கும்போது, ஒரு எண்பது கிலோ மீட்டர் தூரத்திற்குள் ரவி, பீயாஸ், சட்லஸ் செனாப் ஆகிய நான்கு மிகப் பெரிய ஆறுகளைக் கடந்து செல்கிறோம். பஞ்சாப்பின் வளர்ச்சிக்குத் துணை நிற்கும் இந்த ஆறுகள் அனைத்தும் பாகிஸ்தான் பகுதிக்குள் சென்று கடலில் கலக்கின்றன. பாகிஸ்தான் எல்லை மிகவும் அருகிலேயே இருப்பதால் வழி நெடுகிலும் நமது ராணுவ நிலையங்கள் இருக்கின்றன.

ஜம்முவில் எழுத்தாளர் மாநாடு

காஷ்மீர் மாநிலத்தில் குளிர்காலத் தலைநகராக இருக்கும் ஜம்மு ஏறத்தாழ பஞ்சாப் மாநிலத்தின் பிற நகரங்களைப் போலத் தான் இருக்கிறது. இந்த நகரம் வரை ஏறத்தாழ சமதளம் தான். இதிலிருந்து தான் காஷ்மீர் மாநிலத்தின் பற்பல பகுதிகளும் மலைச்சரிவுகளும், பள்ளத்தாக்குகளுமாக இருக்கின்றன. ஜம்மு நுண்கலை இலக்கியப் பெரு மன்றக் கட்டிடத்தில் (Jammu Academy of Language and Fine Arts) விழா நடந்தது. ஜம்மு பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர். லக்கன்பால் விழாத் தலைமையேற்று பேசும் போது, விரும்பியோ, விரும்பாமலோ இந்தியாவை இன்று வரை இணைத்துக் கொண்டிருக்கும் ஆங்கில மொழியினை நாம் விட்டு விட முடியாது. இந்தியர் என்ற உணர்வை வளர்ப்பதற்கு அந்த மொழி இன்று மட்டுமல்ல; எதிர்காலத்திலும் இன்றியமையாததாகும் என்று குறிப்பிட்டார். நாமக்கல் கவிஞர், மற்றும் காஷ்மீரக் கவி குலாம் அகமது மெகசூர் ஆகியோரின் பாடல்கள்,

கருத்துகள் குறித்து சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. மறுநாள் நிகழ்ந்தது கவியரங்கம். ஏறத்தாழ மூன்றரை மணி நேரம். அவையோரும் அலுப்பு சலிப்பின்றி அமர்ந்து கேட்டனர். கருத்தரங்கிற்கு இருந்ததை விடக் கவியரங்கத்துக்குக் கூட்டம் அதிகம் பஞ்சாபி, காஷ்மீரி, டோக்ரி, இந்தி, சமஸ்கிருதம், கூர்முகி ஆகிய மொழிகளில் கவிதை — பொருள் புரியாவிட்டாலும் சிற்சிலர் இசையுடன் படித்த போது கலையரங்கமே மயங்கிக் கிடந்தது. பெரும்பாலோர் தத்தம் கவிதையின் உட்பொருளை ஆங்கிலத்தில் கூறிவிட்டுப் படித்தனர். ஏறத்தாழ இரண்டாயிரம் கிலோ மீட்டர் தூரத்தில் தமிழ் மாநிலத்தைச் சார்ந்த நாங்கள் நற்றமிழை விட்டுக் கொடுக்க முடியுமா? அதுவரையில் சொற்பொழிவோடு பணி முடிந்தது என்றிருந்த எனக்கே ஒரு தணியாத ஆர்வம் — கலையரங்கத்திலேயே பேப்பரில் இருபக்கம் கவிதையைஎழுதிக் கொண்டேன். நாமக்கல்லார் பற்றிய அக்கவிதையை படிப்பதற்கு முன்னர் திருவையாறு பற்றி எனக்குப் பிரியமான புலனைந்தும் பொறி கலங்கி எனும் சம்பந்தர் தேவாரத்தைப் பாடினேன். சந்தமாகவும் கும்மியாகவும் அமைந்த எனது கவியரங்கப் பாடலின் ஓசைநயத்தைப் பிற மொழியினர் அமைதியாகக் கேட்டனர். செந்திறத்த தமிழோசையை அரங்கத்தில் எதிரொலிக்கச் செய்த பெருமகிழ்ச்சியோடு மேடையை விட்டிறங்கினேன் சென்னையைச் சார்ந்த பெருங்கவிக்கோ சேதுராமனும், புலவர் இரமணனும் மலையமானும் தமிழில் கவிபுனைந்து அரங்கேற்றிய பிற நண்பர்களாவர். தமிழ்ப்பேராசிரியர் கலாதாக்கர் ஆங்கிலத்திலும், டாக்டர் ஜயலக்ஷ்மி இந்தியிலும் நாமக்கல் கவிஞரைப் பற்றிய நல்லுரை ஆற்றினர்.

ஜம்முவிலிருந்து உதம்பூர் செல்லும் பெருவழிச்சாலையில் ஐம்பதாவது கிலோ மீட்டரில் கட்ரா என்னும் சிற்றூர் இப்போது பேரூர் ஆகிவிட்டது. அங்கிருந்து 14 கிலோ மீட்டர் மலையடிப்பாதையில் வைணவ தேவியின் குகைக்கோயிலை அடைகிறோம். விழாக்காலங்களில் இரவு பகலாக மக்கள் நடந்து சென்று வைணவ தேவியை வழிபட்டு வருகிறார்கள். நடக்க இயலாதோருக்குக் குதிரை சவாரியும், முதியோருக்குப் பல்லக்கு வசதியும் உள்ளது. வழிநெடுகிலும் குடிநீரும், இளைப்பாறும் இடங்களும் உள்ளன. மலை அடிவாரத்திலேயே காலை 8 மணி முதல் இரவு 10 வரை ரொட்டி, பருப்பு, சாதம் நல்லமுறையில் செய்து இனாமாக அளிக்கின்றனர். நெய் சொட்டும் சூடான கேசரியும் அதில் அடங்கும். மலைமீது குகையில் இருபது மீட்டர் நீளத்திற்குக் குனிந்து கொண்டே சென்று வழிபடவேண்டும். அர்ச்சகர் மூலத்தானத்தில் குங்குமம் கொடுப்-

பதோடு கையில் கிடைத்த சில்லரைக் காசு ஒன்றிரண்டையும் பக்தர்களுக்குக் கொடுக்கிறார். மலையில் இலவசமாகவும், கட்டணம் செலுத்தியும் தங்குவோருக்கு இரவில் கம்பளி கொடுக்கிறார்கள் : மலை மீது எழுந்தருளியுள்ள வைணவ தேவியை ஜம்முவுக்குச் செல்வோர் தவறாது வணங்கி வரல் வேண்டும்.

அங்கு தங்கியிருந்த நான்கு தினங்களில் ஒரு நாள் எங்கள் அனைவருக்கும் நகர்ப்புறப் பகுதியில் டோக்ரி ஆங்கிலப் பள்ளி ஒன்றில் மதிய விருந்து கொடுத்தனர். டோக்ரி என்பது காஷ்மீரப் பகுதியில் வசிக்கும் ஹிந்துக்களின் ஒரு பிரிவினரின் பெயர். இதுவே இவர்கள் பேசும் மொழிக்கும் பெயராயிற்று. பஞ்சாபி மொழியிலிருந்து பிரிந்த கிளை மொழி என்று கருதப்படும் இதனை இன்றைய நிலையில் ஏறத்தாழ பதினைந்து லட்சம் மக்கள் பேசுகின்றார்கள். காஷ்மீர் மகாராஜா கரன்சிங் டோக்ரி பிராமணர். பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் நிலவி வரும் இம்மொழியினர். அனைவரும் இந்துக்களே. காஷ்மீரப் பள்ளத் தாக்கில் இருக்கும் முஸ்லீம் காஷ்மீரிகள் தங்களைப் புறக்கணித்து விடுகிறார்கள் என்னும் அச்சமும் ஆத்திரமும் இவர்களிடம் காணப்படுகிறது. ஆயினும் இனப்பற்றிலும், மொழி ஆர்வத்திலும் இவர்கள் கரை கடந்த வேட்கை உடையவர்கள். ஜம்மு நகரின் கிழக்குப் பகுதியில் செனாப் நதிக் கரையில் இவர்களது முன்னோர்கள் கட்டிய கோட்டையும் கோவிலும் இன்றும் பாதுகாக்கப்படுகிறது.

மீண்டும் டில்லியில்

ஜம்முவிலிருந்து திரும்பும் போதும் பேருந்து பயணம் தான். காலை 6 மணிக்குத் தொடங்கிய பயணம் இரவு 9 மணிக்கு டில்லியில் நிறைவுற்றது அக்டோபர் 22-ஆம் நாள் டில்லி எழுத்தாளர் சங்கத்தினர் எங்களுக்கு வரவேற்பு அளித்தனர். விருந்தினரை விட வரவேற்றவர் எண்ணிக்கை மிகவும் குறைவு என்பது வருந்தத்தக்க உண்மைதான். இந்த எழுத்தாளர் சங்கத்தின் தலைவர். க நா சுப்பிரமணியன் ஆவார் டில்லி வானொலியில் உயர் அலுவலராகப் பணிபுரியும் திரு சுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கிய அந்நிகழ்ச்சியில் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசிய சென்னை எழுத்தாளர் பெருமன்றத் தலைவர் வெங்கடசுப்பிரமணியம் க.நா.சு. போலத் தமிழுக்குத் துரோகம் செய்தவர் யானறிந்த வரையில் வேறு யாரும் இல்லை. கல்கிக்கு என்ன தெரியும்? தமிழில் இது உண்டா? அது

உண்டா ' என்று பொருளற்ற வாதத்தைக் கிளப்பி விட்டு டில்லியிலிருந்து கொண்டே தமிழுக்குப் பெருந்தீங்கு செய்தவர் '' என்றெல்லாம் வெளிப்படையாகப் பேசியது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு நூலகங்களுக்குச் சென்று, இயன்ற அளவு குறிப்புகள் எடுத்துக் கொண்ட மனநிறைவோடும், வேற்று மொழி எழுத்தாளர்களைக் கண்டு பழகி கருத்துகளைப் பரிமாறிக் கொண்ட மகிழ்ச்சியோடும் ஏறத்தாழ ஒரு திங்கள் பயணம் நிறைவுற்றது.

—பொறுப்பாசிரியர்

தமிழன்னைக்குச் சிலை

1981 - ஆம் ஆண்டில் தஞ்சாவூரில் தொடங்கி வைக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஏழாவது ஆண்டு விழா அண்மையில் நடைபெற உள்ளது அப்போது வல்லம் பெருஞ்சாலையில் அமைந்துள்ள புதிய வளாகத்தில் தமிழன்னையை உருவகித்துக் காட்டத்தகும் 16 அடி உயரக் கற்சிலை ஒன்று திறந்து வைக்கப்படும். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடந்த போது ஆயத்தப் செய்து வைத்திருந்த தமிழன்னையின் சிலையினை அந்நாளையப் பிரதமர் இந்திரா திறந்து வைக்க மறுத்து விட்டார். தமிழன்னையின் சிலையினைத் தாங்கும் பெருமை தஞ்சை மண்ணுக்குக் கிடைத்திருக்கிறது. சாலையின் முகப்பில் அமைக்கப்பட இருக்கும் மகரதோரண வாயிலும், கரிகாலன், இராஜராஜன் ஆகியோரின் பெயரால் அமைய இருக்கும் மணிமண்டபங்களும் தமிழ்ப்பல்கலைக் கழகம் காண வருவோருக்கெல்லாம் சோழநாட்டில் இருக்கிறோம் என்ற உணர்வை ஏற்படுத்தும் என்று நம்பலாம். துணைவேந்தர் டாக்டர் அகத்தியலிங்கம் அவர்கள் மேற்பார்வையில் வரலாற்றில் இடம்பெறத்தகும் இச்சீரிய பணிகள் நிறைவேற உள்ளன

மரபுக்கு மீறிய திருக்குறட் பதிப்பு

ஆயிரத்து மூந்நூற்று முப்பது அருங்குறளில் காமத்துப்பாலின் இருநூற்றைம்பதை ஒதுக்கி விட்டு மீதமுள்ள ஆயிரத்து எண்பதையும் மரபு வழிபட்ட பால் இயல் அதிகாரப் பிரிவுகளை ஒழித்து, குறி சொல்லும் கணியன் சோழிகளைக் குலுக்குவது போல் குலுக்கியெடுத்துத் தனக்குப் பொருத்தமெனத் தோன்றியாங்கு ஐந்து இயல்களில் 115 பிரிவுகளில் ஒவ்வொன்றிலும் மூன்று முதலாகப் பதினான்கு குறள் வரை இவ்வுரையாசிரியர் பகுத்து, இந்நூலை வெளியிட்டுள்ளார். ஆயினும் ஒரு பகுப்பில் (54) ஒரு குறள் மட்டுமே உள்ளது. எனவே குறளின் முறை வைப்பிலும், பொருள்கோள் பாங்கிலும் இவ்விளக்க உரையாளர் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்துள்ளார்.

குறளுக்கு விளக்கம் கூறிய பழைய உரைகாரரும், இற்றை நாள் அறிஞரும் சிற்சில பாக்களுக்கு உரை காணுவதில் தான் அங்கும் இங்குமாக வேறுபட்டனரே ஒழிய, முறை வைப்பினைப் போற்றி வந்துளளனர். அப்படிப் போற்றித் தான் ஆக வேண்டும் என்ற நியதியில்லை. நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கில நாட்டில் வாழ்ந்த ஷேக்ஸ்பியர் நாடக முறை வைப்பிலே கூடப் பற்பல பதிப்பாசிரியர்கள் முரண்பட்டு நிற்கின்றனர். பகவத் கீதைக்கு ஏறத்தாழ இருபது பேர் ஆங்கிலத்தில் உரையும் விளக்கமும் கண்டிருந்தாலும், இவை அனைத்திலும் மனநிறைவு கொள்ளாது, தான் எழுதிய உரை விளக்க நூலிற்குப் பொருள் பொதிந்த முறையில் "Bhagavat Gita as it is" என்றே தலைப்புக் கொடுத்துள்ளார் — பிரபுபாத சுவாமிகள். நிலைமை இப்படியிருக்க, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் குறளின் முறை வைப்பில் மாறுபட்டு நிற்பதைத் தவறு என்று கொள்ள இயலாது — தக்க காரணங்கள் இருந்தாலொழிய.

சென்னையில் நிகழ்ந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக்குப் பிறகு தமிழகத்தின் மூன்று பல்கலைக் கழகங்களில் திருக்குறள் துறைகள் (Chairs) தோற்றுவிக்கப்பட்டன. குறளியக்கத்தை மையமாகக் கொண்டு பணியாற்ற வேண்டிய இந்த ஆய்வுத் துறைகளே செய்யத்தகுவதாய அசாதாரணமான பெரும் பணியைத் தனியாகச் செய்துள்ள எழுக்கறிஞர் ஆனந்தன் அவர்களின் பேருழைப்புக்கு நமது பாராட்டுகள் உரியன. நூலின் நீண்ட முன்னுரையினைப்

படித்து, பல்வேறு குறள் விளக்கத்தினைப் பார்த்து எமக்குத் தோன்றிய சிற்சில கருத்துக்கள் ஈண்டு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

(i) அறம் என்னும் தமிழ்ச் சொல்லின் அளவிடற்கரிய பேருண்மையினை ஆசிரியர் எடுத்துக் காட்டிய திறம் சீரியதாகும்.

(ii) தமிழ் கூறு நல்லுலகம் இதுகாறும் போற்றி வந்த முறை வைப்பினைப் பொருத்தமற்றதெனக் கூறும் இவ்வுரையாசிரியர் காமத்துப்பால் பற்றி ஏதும் கூறிற்றிலர். ஆயின் அங்குள்ள முறை வைப்பு மட்டும் ஆசிரியருக்கு உடன்பாடா எனும் வினா எழுவது இயற்கை. அதற்கு நூலின் எப்பகுதியிலும் விடையில்லை.

(iii) இதுவரையில் பரப்பப்பட்டது "பரிமேலழகமே தவிர திருவள்ளுவம் அன்று" எனக் கூறும் போது உரையாசிரியரின் எண்ணம் நமக்குப் புலனாகின்றது. அந்த எண்ணத்தோடு இவரது உரையினைக் காணும் போது "ஊறொரால் உற்றபின்" என்னும் பாவிற்குக் கூறப்பட்ட பரிமேலழகர் உரையினை மறுத்து வள்ளுவத்தின் தொன்மையினையும், தனித் தன்மையினையும் இவ்வுரையாசிரியர் காப்பாற்றியிருக்க வேண்டும். அப்படியில்லாதது ஒரு வகையில் ஏமாற்றமே.

(iv) அகர முதல என்னும் முதற் குறளை இத்தொகுப்பில் இறுதியாகத் தான் காணுகிறோம். ஆதிபகவன் எனும் சொல்லுக்கு 'மூலப்பகுதி' என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இக்குறட்பா' "கடவுளின் உண்மையைக் கூறவில்லை. உலகம் மூலப்பகுதியை—இயற்கையை முதலாகக் கொண்டது" என்கிறார் ஆசிரியர். மூலப் பகுதியாகிய அந்த இயற்கையினையே கடவுள் என்று கொள்ளினும் அது தவறில்லையே! 'மைப் படிந்த கண்ணாளும்' என்னுந் தேவாரத்தையும், "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திரு, நாமம்பாடி" எனும் மணிவாசகத்தையும் ஊன்றிப் பார்த்திடின் இவ்வுண்மை விளங்கும். கடவுட் கொள்கைக்கு மாறாக மேடை போட்டுப் பிரச்சாரம் செய்த ஈரோட்டுப் பெரியாரும்" இயற்கைத் தோற்றங்களுக்கு ஏதாவது காரணமோ சக்தியோ இருக்கவேண்டும் என்றும், அதற்கு கடவுள் தெய்வம் ஆண்டவன் என்பதாகவும் சொல்லிக் கொண்டிருப்பவர்களிடத்தில் நமக்கு இப்போது தகராறு இல்லை" என்று கூறுவதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

(1—7—1928 — குடியரசு இதழ்)

(v) மாந்தரியல் என்றோ மானுட இயல் என்றோ கூறாமல், மாந்த இயல் (34) என்பது பொருந்துமாறில்லை. சொல்லாக்க மரபோடியைந்தும், திரிபுபட உணராமல் இருக்கின்றவாறும் புதிய சொற்களைப் பயன்படுத்தல் நன்று.

(vi) பல்கலைக் கழகங்களில் 'டாக்டர்' என்றே குறிப்பிட்டு அட்டைகளை வழங்குவதால், அதனை மொழி பெயர்க்காமல் அப்படியே வழங்குவதே முறை. உலகம் முழுவதும் அப்படித்தானே அழைக்கின்றனர்! டாக்டர் பட்டத்தைத் தமிழில் குறிப்பிட எண்ணம் கொண்டு ஓரிடத்தில் முனைவர் (63) என்றும், பிறிதோரிடத்தில் பண்டாரகர் (79) என்றும் கூறுகின்ற முரண்பாடு தெரிகிறது. இலங்கையில் டாக்டர் பட்டத்தைக் 'கலாநிதி' என்று குறிப்பிடுகின்றனர்.

புரட்சிகரமான மாறுதல்கள் செய்யப்பட்ட இத்திருக்குறளின் போக்கிலும் உரையிலும் உடன்பாடு உளதாயினும், இலதாயினும் இது கற்றறிந்தோர் அனைவரும் பயின்று ஆய்தற்குரிய நூலாகும். கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் இந்நூலைப் பெருமளவில் வாங்கித் திருக்குறளைப் பற்றிய புதிய ஆய்வுக்கு வழி வகுக்கலாம்.

—நூல் : திருக்குறளின் உண்மைப் பொருள்

உரையாசிரியர் : கு. ச. ஆனந்தன்
பி.காம்., பி.எல்.,
45, பாரதிவீதி,
கோபிசெட்டிபாளையம் - 638 452

மனமுருகிக் கண் திறந்தாள்

— சௌந்தரா கைலாசம்

ஈழநாட்டில் தமிழர்கள் போராட்டம் மேற்கொண்ட காலத்திலிருந்து நடைபெற்று வந்த கலவரம், கொலை, கற்பழிப்பு போன்ற செய்திகளைத் தாங்கவொண்ணாத நிலையில், முன்னாள் உச்சமன்ற நீதிபதி அமரர் கைலாசம் அவர்களின் துணைவியாரும், தமிழ்க் கவிஞருமான திருமதி. சௌந்திரா கைலாசம் அவர்கள் வேள்விகள் நடத்தி, வழிபாடுகளில் ஈடுபட்டு அவரது பிரார்த்தனைகள் நிறைவேறிய கட்டத்தில் பாடிய கவிதை ஈண்டு அச்சிடப்பட்டுள்ளது.

— ஆசிரியர்

போற்றுகிற நல்லமைதி நிறைந்தி ருந்த
பூக்காடாய் விளங்கிவந்த ஸ்ரீலங் காவில்
வேற்றுமைகள் பலவாகப் பெருகி நின்று
வேண்டாத வேதனைகள் உண்டு பண்ணி
ஏற்றமுற ஒட்டாமல் மாந்தர் தம்மை
இழிநிலைக்குத் தள்ளியவோர் நிலைமை கண்டே
ஆற்றவொணாப் பெருந்துயருக் காளாய் நின்றேன்!
அகம்நிறையும் கவலைகளால் அல்லற் பட்டேன்!

ஆதரவாய் அன்போடும் பாசத் தோடும்
அண்ணனெனத் தங்கையென வாழ்ந்த மக்கள்
சேதமுறும் விதமாகச் சிந்தை மாறித்
தீராத சண்டையிட்ட தெண்ணி நொந்தேன்!
பாதகங்கள் ஆயிரமாய் முளைத்தெ ழும்பப்
பண்பாட்டின் அடிமரமே பட்டுப் போக
வாதுகளும் வழக்குகளும் வறட்சி சேர்க்க
மாந்தரெலாம் அழிந்தமைகண் டுள்ளம் வெந்தேன்!

எத்தனைதான் துயர்வரினும் கணநே ரத்தில்
இல்லாமற் செய்துவிடும் என்றன் தாயை,
கொத்தவரும் பகைமையினைக் கொன்று. வெற்றி
கொண்டுதரும் கொற்றவையாம் காளித் தாயை
சித்தமதில் நினைத்துருகி வேண்டிக் கொண்டேன்;
திருக்குடத்தில் வீற்றிருத்தி வேள்வி செய்தேன்!
தொத்துகிற கேடுகளைச் சூலத் தாலே
துரத்திவிட்டு நல்லமைதி சேர்ப்பாய் என்றேன்!

ஓங்கிஉயிர் வாங்குகிற ஆயு தங்கள்
ஒருவருமே தூக்காமல் கீழே போட
மாங்கலியம் மாதர்களின் கழுத்தின் நீங்கி
மலைபோலே குவியாத நிலையுண் டாக
தேங்குகிற கவலையுடன் கொள்ளி வைக்கச்
செல்வமகன் இலையென்றே முதிய பெற்றோர்
ஏங்குமொரு நிலை மாற, எவரும் வாழ
இதயபரி சுத்தமுடன் தொ ழுதி ருந்தேன்!

திருவுடைய மந்திரங்கள் ஓதி நின்றேன்;
செம்மலரால் அர்ச்சனைகள் செய்தி ருந்தேன்;
அருமையுள நதிகளின்நற் புனித நீரை
அன்னையவள் பதமலருக் கபிஷே கித்தேன்;
தரையினிலே ஓமகுண்டம் தனைய மைத்துத்
தக்கவொரு வேள்வியினைப் புரிய லானேன்;
உருகுகிற நெஞ்சுடனே, எழுந்த போர்தான்
ஓய்வதற்கு வழிகாட்டு தாயே! என்றேன்!

சன்மார்க்கம் சமத்துவம்ச கோத ரத்வம்
சாந்தியொடு நற்சமா தானம் வேண்டி
அன்னையினை இரவுபகல் வணங்கி நின்றேன்!
அவளும் தன் மனமுருகிக் கண்தி றந்தாள்!
இன்னலொரு கோடியெனத் தந்த வெம்போர்
இனியில்லை என்னுமொரு நிலைமை தோன்றி
நன்னயங்கள் வழங்குகிற அமைதி, மண்ணின்
நாற்புறமும் நிலவிடவே அருளைச் செய்தாள்!

தீராத போரின்று தீரக் கண்டேன்:
சிந்தையினை வதைத்ததுயர் மாறக் கண்டேன்;
ஆராத பெரும்புண்ணும் ஆரக் கண்டேன்;
அமைதிநகை குலுங்கிவரும் அழகைக் கண்டேன்!
வீராதி வீரர்பலர் தங்கள் வாழ்வை
விலையாகத் தந்திந்த அமைதி கொண்ட
சீரான வரலாற்றைத் தெரிந்து கொண்டேன்;
சிறப்புடையார் அவர்களெனப் புரிந்து கொண்டேன்!

அத்தகைய நல்லோரின் ஆன்மா என்றும்
அமைதியினைக் கொள்வதற்கு வணங்கி நிற்பேன்!

பக்தியுடன் அவர்களுக்குப் பிண்டம் போட்டுப்
பாசத்தோ டுளமுருகிக் கிரம்கு விப்பேன்!
புத்துலகைச் சமைப்பதற்குத் தோன்று கின்ற
புதியதோர் ஆட்சியினாய் ஸ்ரீலங் காவில்
நித்தமும்நல் லின்பங்கள் சேர்வ தற்கு
நீளவிழிக் காளியவள் அருள்செய் வாளே!

நாதன் தாள் வாழ்க!

தொலைக் காட்சியில் காப்பியங்கள்

வால்மீகியின் இராமகாதையினை இராமாநந்த சாகர் என்பாரும், மகாபாரதக்கதையினை சோப்ரா என்பாரும் தொலைக் காட்சிக்கு ஏற்றவாறு ஒளிப்படமாக்கி அண்மைக் காலந் தொட்டு அவற்றை தொலைக் காட்சியிலும் காட்டிவருகின்றனர். எத்துணை அறிவியல் உணர்வு மிகுந்திருந்தாலும், புராணம் என்று சிலரால் ஒதுக்கித்தள்ளப் படும் இவற்றை மிக்க ஆர்வத்தோடு பொதுமக்கள் கண்டு களித்து வருகின்றனர் என்பது ஒரு வியத்தகு உண்மையாகும் சிலப்பதிகாரத் தினையும் ஒளிப்படமாக்கும் முயற்சி ஏதேனும் அரசின் கவனத்தில் உள்ளதா என்று டில்லி மக்கள் அவையில் கேட்கப்பட்டது. இது வரை அப்படியொரு திட்டம் இல்லை இனி மேல் அத்தகைய வேண்டுகோள் வந்தால், அது அரசினால் பரிசீலிக்கப்படும் என்று பதில் அளிக்கப்பட்டது.

தமிழ்ச் சங்கச் செய்திகள்

மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வு பற்றிய செய்திகள்

மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய குறிப்புகள் :

1987—1988 ஆம் ஆண்டில் உயர் நிலை - மேல் நிலைப் பள்ளி பத்தாம் வகுப்பு - பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மதுரைத் தமிழ்ச சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில், மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களையும், ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று நூல்கள் பரிசு பெற்ற மாணவர்களையும். மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில் வாழ்த்துகிறோம். மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்து வரும் உயர் நிலைப் பள்ளி மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் பிற ஆசிரியர்களுக்கும் எங்களது அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய விவரம் :

10 - ஆம் வகுப்பு (எஸ் எஸ்.எல்.சி) தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விவரம் :

வ எண்.	மாணவர் பெயரும் பள்ளி முகவரியும்	மதிப்பெண் 200க்கு	பரிசு விவரம்	பரிசுத் தொகை ரூ— பை
1)	இரா. இராமதேவி புனிதவளனார் மகளிர் மேல் நிலைப்பள்ளி நாகர்கோவில், குமரி - மாவட்டம், 629001	190	முதல்	100—00

2)	ல. கீதா, என்.எல்.சி. பெண்கள் மேல்நிலைப் பள்ளி, வட்டம்-11, நெய்வேலி - 3 தெ.ஆ மாவட்டம் - 607803	189	இரண்டாம்	50-00
3)	ஜி. பாலச்சந்தர், அரசினர் உயர்பள்ளி. வாகராயம் பாளையம், கோவைமாவட்டம்	188	மூன்றாம்	15-00
4)	அ. செல்வி, தஸ்நேவிஸ் மாதா பெண்கள் மேல் நிலைப்பள்ளி தூத்துக்குடி, வ. உ. சி. மாவட்டம் - 628001 (மூன்றாம் பரிசுத்தொகை ரூ 25 உடன் ரூ 5 சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற இரு மாணவருக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது)	188	,,	15-00
5)	பி. ஜோதிமணி, அரசினர் உயர்பள்ளி, வாகராயம் பாளையம், கோவைமாவட்டம்	186	ஆறுதல்	10-00
6)	இரா. கிராஸ் எபனேசர் ரஸ்கின், தூய தெரசாள் மேல்நிலைப்பள்ளி, வடக்கன்குளம், நெல்லை மாவட்டம் 627116	185	,,	10-00
7)	சி. பரமேஸ்வரி, புனிதவளனார் மகளிர் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில், குமரி- மாவட்டம் - 629001	184	,,	10-00
8)	ஐ. சுமதி, புனிதவளனார் மகளிர் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில், குமரி- மாவட்டம் - 629001	183	,,	10-00

9)	த. சொக்கலிங்கம், ஜெயக் கொண்ட விநாயகர் உயர் பள்ளி, நாச்சியாபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்,	183	ஆறுதல்	10—00
10)	இரா. லதா, சி. நா. ராமசாமி ராஜாமேல்நிலைப் பள்ளி, ஸ்ரீ கோமதிபுரம், நெல்லை- மாவட்டம் - 627756	182	,,	10—00
11)	எம். விஜயலெட்சுமி, தால்மியா மேல்நிலைப்பள்ளி, தால்மியாபுரம், கல்லக்குடி, திருச்சிமாவட்டம், - 621651	182	,,	10—00
12)	எஸ். சசிக்குமார், அரசினர் உயர்பள்ளி, வாகராயம் பாளையம், கோவைமாவட்டம்	180	,,	10—00
13)	பி. சரஸ்வதி, பங்கயம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி போடிநாயக்கனூர்,	180	,,	10—00
14)	வ. அபிராம சுந்தரி, புனித அந்தோணியார் பெண்கள் உயர் பள்ளி பாண்டிச்சேரி - 605001	179	,,	10—00
15)	சு. அ. சோபனா, தஸ்நேவிஸ் மாதா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி, வ.உ.சி. மாவட்டம் - 628001	178	,,	10—00
16)	ர. ஜெயசுதா, ஸ்ரீ வெங்கடேசுவரா உயர் பள்ளி, அப்பநாயக்கன்பட்டி, கோவை மாவட்டம் - 641402	178	,,	10—00
17)	வி. ஷீலா அரசினர் மகளிர் உயர் பள்ளி, மேச்சேரி, சேலம்மாவட்டம்.	178	,,	10—00

18)	கே. எஸ். சௌமியலெட்சுமி தால்மியா மேல்நிலைப்பள்ளி, தால்மியாபுரம் கல்லக்குடி, திருச்சி மாவட்டம் - 621651	178 ஆறுதல்	10—00
19)	கே. மஞ்சுளா, கன் கார்டியா மேல்நிலைப்பள்ளி, ஆம்பூர், வ. ஆ.மாவட்டம்,	178 ,,	10—00
20)	தி.ப. செல்வி, மங்கையர்க்கரசி மேல் நிலைப் பள்ளி, மதுரை - 625010	178 ,,	10—00
21)	கே. புருஷோத்தமன், என்.எல்.சி. ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வட்டம்-10, நெய்வேலி தெ. ஆ. மாவட்டம் - 607801	178 ,,	10—00

12-ம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விவரம் :-

வ. எண்	மாணவர் பெயரும் பள்ளி முகவரியும்	மதிப்பெண் 200க்கு	பரிசு விபரம்	பரிசுத் தொகை ரூ—பை
1)	நா. பகவதி, புனித வளனார் பெண்கள் மேல் நிலைப் பள்ளி, நாகர்கோவில்	185	முதல்	100—00
2)	கே. ராமலிங்கம், இந்து மேல்நிலைப் பள்ளி மதுராந்தகம், செங்கை மாவட்டம்	183	இரண்டாம்	30—00
3)	ஆர். மாலதி, நிர்மலா மகளிர் மேல்நிலைப் பள்ளி, மதுரை - 625009.	183	,,	30—00
	இரண்டாம் பரிசுத் தொகை ரூ 50 உடன் ரூ 10 சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவருக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது)			
4)	கோ. அனுபமா, புனித வளனார் பெண்கள் மேல் நிலைப்பள்ளி நாகர்கோவில்,	182	மூன்றாம்	25—00
5)	மு. பானு, புனித வளனார் பெண்கள் மேல் நிலைப் பள்ளி, நாகர்கோவில்,	179	ஆறுதல்	10—00
6)	சி. விஜயலெட்சுமி, மங்கையர்க்கரசி மேல்நிலைப்பள்ளி, மதுரை - 625010	177	,,	10—00
8)	ஜே. ஹெலன் ஆலிஸ் ஸ்டெல்லா, நிர்மலா மகளிர் மேல்நிலைப்பள்ளி, மதுரை - 625009	177	,,	10—00

9)	ஜெவை விஜய சித்ரா, புனித தெரசாள் மேல்நிலைப் பள்ளி, வடக்கன் குளம், நெல்லை மாவட்டம் - 627116	176	ஆறுதல்	10—00
10)	தே. சந்திரா, என். எல். சி பெண்கள் மேல் நிலைப் பள்ளி நெய்வேலி - 3. தெ. ஆ. மாவட்டம் - 607003,	176	,,	10—00
11)	சீ. பாலநாதன், புனித சின்னப்பர் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, நெய்வேலி - 1 தெ. ஆ. மாவட்டம் - 607001	176	,,	10—00
12)	எம். செல்வன் சவரிராஜ், என் எல்.சி. ஆண்கள் மேல் நிலைப் பள்ளி, நெய்வேலி - 1	176	,,	10—00
13)	பி. பக்த கௌரி, புனித மரியன்னை மகளிர் மேல் நிலைப் பள்ளி கோத்தகிரி, நீலகிரி மாவட்டம் - 643217	176	,,	10 - 00
14)	என். பாலசுப்பிரமணியன், தூய சூசையப்பர் மேல்நிலைப் பள்ளி, செங்கற்பட்டு - 603002	176	,,	10 - 00
15)	எம். அசோக்குமார், புனித அருளானந்தர் மேல்நிலைப் பள்ளி ஓரியூர், முகவை - மாவட்டம்	176	,,	10—00
16)	நா. சுபா, பி. கே. என். மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருமங்கலம்.	176	,,	10—00
17)	ரா. செல்வி, மங்கையர்க்கரசி மேல்நிலைப்பள்ளி மதுரை - 625010.	176	,,	10—00

18)	ம. விஜயா, அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி மதுரை - 625010	176	ஆறுதல்	10—00
19)	ஏ டி. பொன்மலர், சீதாலெட்சுமி மகளிர் மேல் நிலைப்பள்ளி, திருநகர், மதுரை - 625006	176	,,	10—00
20)	ல. ரஸிதாபேகம், ஈ. வெ. ரா. நாகம்ம்மையார் மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி, மதுரை - 625001.	176	,,	10—00
21)	ஆர். எஸ் அஜிதா, நிர்மலா மகளிர் மேல்நிலைப்பள்ளி, மதுரை — 625009	178	,,	10—00

1988 - 89 ஆம் ஆண்டு தமிழ் தேர்வு பற்றிய அறிவிப்பு

பேரன்புடையீர், வணக்கம்

பாலவநத்தம் குருநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவ-ரவர்கள் புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை கூடல் மாநகரில் 1901 ஆம் ஆண்டு நிறுவினார்கள் தேவரவர்கள் இந் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன் நோக்கம் மிக உயர்ந்த தாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல், இடை, கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதன் வழியில் தமிழில் சிறந்த புலமை பெற்றவர்களை உருவாக்க எண்-ணிய தேவரவர்கள். இந்நான்காம் தமிழ்ச் சங்கம் வாயிலாக, தமிழ் கல்லூரி ஒன்றை நிறுவினார். இன்றைக்குக் கவிஞர்களாகவும் தமிழ் அறிஞர்களாகவும் இருப்பவர்களில் பலர் இக்கல்லூரியில் தங்கி முறை யாகக் கல்வி பயின்று பண்டிதம் என்னும் புலவர் பட்டத்தைப் பெற்றவர்களாவர்.

பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்கு திருவுருவச்சிலையும் பாரதப்பிரதமரின் பாராட்டும் :

பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்கள் பழம்பெரும் மதுரை-யில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்த தொண்-டினை நினைவு கூறும் வண்ணம், அன்னாரின் திருவுருவச் சிலையை மதுரையின் மையப்பகுதியில் நிறுவி தமிழக அரசு சிறப்புச் செய்துள்ளது

2-10 88-ல் பாரதப்பிரதமர் மாண்புமிகு திரு ராஜீவ்காந்தி அவர்கள் பாம்பன்சாலைப் பாலத்தைத் திறந்து வைத்த போது தமிழ் வளர்த்த சேதுமன்னர்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவி தமிழ் வளர்த்த பாண்டித்துரைத்தேவர் அவர்களையும் தமது உரையில் பெரிதும் புகழ்ந்து பாராட்டிப் பேசியதைத் தாங்கள் அறிவீர்கள்

தேர்வின் அமைப்பும், பயனும்

பொதுத்தேர்வில் மாணவர்கள் தமிழில் தோல்வி அடைந்து விடக் கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத் தேவரவர்கள் தொடங்கிய தமிழ்த்தேர்வு, கடந்த 87 ஆண்டுகளாக சிறப்புடன் செவ்வனே நடத்தப் பெற்று வருகிறது இத்தேர்வில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு பெரும் பயன் பெற்று வரு-வதைத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அரசு வகுத்துள்ள தமிழ்ப்பாடப் பகுதிகளே தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்விற்கும் உரிய பாடப் பகுதிகளாகும். அரசு எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச் சங்கமும் வினாக்கள் அமைத்துத் தேர்வு நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கு [PUBLIC EXAMINATION] முன்னதாகவே தமிழ்ச் சங்கம் தேர்வினை நடத்தி, மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களைத் தெரிவித்து வருகின்றது. அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத் தேர்விற்கு நன்முறையில் தங்களைத் தயார் செய்து கொள்ள தமிழ்ச் சங்கத் தேர்வு வாய்ப்-பளிக்கிறது.

சான்றிதழும் சிறப்புப்பரிசும் :

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ் அளிக்கப் படுகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்கட்குப் பரிசாக நூல்கள் வழங்கப் படுகின்றன மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும், பாராட்டும் அளவிற்கு மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுபவர்களுக்கும், ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன. அம்முறையில் சென்ற ஆண்டு மட்டும் நாற்பது மாணவர்களுக்குமேல் ரொக்-கப் பரிசு பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம் ரொக்கப் பரிசுப்பெற்ற மாணவர்கள் பற்றிய விவரங்கள் இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளன தமிழ்ச் சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும், பெருமையும் என்றும் உண்டு.

தேர்வு நாள், தேர்வுக் கட்டணம் :

	தேர்வு நாள்	— தேர்வுக் கட்டணம்
பத்தாம் வகுப்பு (S. S. L. C.)	11-2-1989	ரூ 4. 25
,, (Matriculation)	11-2-1989	ரூ. 4 25
பன்னிரண்டாம் வகுப்பு (பொது)	28-1-1989	ரூ. 4. 25
(சிறப்புத் தமிழ்)	30-1 1989	ரூ 2. 25

பத்தாம் வகுப்பு (மெட்ரிகுலேஷன்) தேர்வு :

பல மெட்ரிகுலேஷன் பள்ளி முதல்வர்களும் தமிழாசிரியர்களும் கேட்டுக் கொண்டதன்படி சென்ற ஆண்டு முதல் பத்தாம் வகுப்பு (மெட்ரிகுலேஷன்) மாணவர்களுக்கு தனி வினாத்தாள் அமைக்கப்பட்டு தேர்வு நடத்தி வருவதைத் தாங்கள் அறிவீர்கள். முழுக்க முழுக்க மெட்ரிகுலேஷன் மாணவர்களுக்கான பாடத் திட்டப்படியே அவர்களுக்கு வினாத்தாள் அமைக்கப்படுகிறது. மெட்ரிகுலேஷன் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் தமிழாசிரியர்களும் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அன்பு வேண்டுகோள் :

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்திட தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை முன்கூட்டி அறிந்திட வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கிறோம். ஆகையால் உங்கள் பள்ளியிலிருந்து கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாகக் குறித்து அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்களிடமிருந்து தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் கடிதம் கிடைத்தவுடன் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான (1) மாணவர் பெயர்ப் பதிவுப் பட்டியல் (2) வரவு செலவுப் பட்டியல் (3) விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பெயர்ப் பட்டியல் (4) கால அட்டவணை, தேர்வுக் கட்டண விபரம், தேர்வுச் செலவிற்குப் பிடித்துக் கொள்ளும் தொகை விவரப்பட்டியல் முதலியன அனுப்பி வைக்கப்படும்.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் இவ்வாண்டுத் தேர்வில் கலந்து கொள்ள இயலவில்லை யென்றாலும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்ச் சங்கத் தேர்வு நடத்திட அரசு அனுமதி :

அரசு ஆணை R. Dis 166528 / 65 Dated 22-12.65 என்ற ஆணையின் (G O) மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வினை கல்வி நிலையங்களில் நடத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

சங்கத்தோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை – 625001.

இந்த நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி சான்றோர் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

சேதுபதி மகாராணி
த. இந்திராதேவி
தலைவர்

தங்களன்புள்ள
என். எஸ். முத்துமலைச்சாமி
செயலாளர்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1.	மதுரைத் தமிழ்ச் சங்க வரலாறு	12-00
2.	பன்னூற்றிரட்டு	5-00
3	தமிழ்ச் சொல்லகராதி	25-00
4.	மாறனலங்காரம் (பொருளணியியலுரை)	5-00
5.	பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும்உரையும்)	2-00
6.	குருகைமான்மியம்	10-00
7.	டி சி. ஸ்ரீநிவாசய்யங்கார் நினைவு மலர்	1-00
8.	பெருந்தொகை	15-00
9.	செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு	5-00
10.	செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு)	10-00
11.	**கோவை கலம்பக நூல்கள்**	12-00
	1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்	
	2. மதுரை மும்மணிக் கோவை	
	3. சிராமலைக்கோவை	
	4. கலசைக் கோவை	
	5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)	
	6 திருவருணைக் கலம்பகம்	
	7. குருமொழி வினாவிடை	
12.	**உலா நூல்கள்**	10-00
	1. திருவாரூருலா	
	2. திருச்சிறு புலியூர் உலா	
	3. விக்கிரம சோழனுலா	
	4 கடம்பர் கோவில் உலா	
	5 தேவையுலா	
	6. புலவராற்றுப்படை	
13.	**பாமாலை நூல்கள்**	12-00
	1. திருப்பணிமாலை	
	2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)	
	3. திருக்குற்றாலமாலை	
	4 திருப்புல்லாணிமாலை	
	5 திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)	
	6. கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	
	7. கலைசைச் சிலேடை வெண்பா	
	8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)	